பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 21 திங்கட்கிழமை (06.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 250

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்

பிராந்திய பொருளாதார, அரசியல் நலன்களுக்கு அது மிகவும் அவசியம் என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

புதுடில்லி,ஓக. 6

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையை இந்தியா அங்கீகரிக்க வேண்டும். பிராந்திய பொருளாதார மற்றும் அரசியல் நலன்களின் அடிப்படையில் அது அவசியம்.

இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

புதுடில்லியிலிருந்து வெளிவரும் ''த சண்டே இந்தியன்'' வார இதழுக்கு வழங்கிய செவ்வியில் மேற்படி கருத்தை முன்வைத்துள்ளார்.

★ ஜனாதிபதி மஹிந்தா யுத்தப் பிரகடனம் செய்திருக்கிறார். அதனால் அமைதிப் பேச்சுக்கள் குறித்துப் பிரஸ்தாபிப்பது பொருத்தமல்ல.

★ வடக்கில் இராணுவத் தாக்குதல் விரிவடைந்தால் அந்த ஆக்கிரமிப்புப் போருக்கு நாம் பதிலடி கொடுப்போம்.

★ விடுதலைப் புலிகளின் விமானப் படை, கடற்படை, தரைப்படை ஆகியவற்றினால் இந்தியாவுக்கோ வேறு எந்த அயல் நாட்டுக்கோ தீங்கேற்படுத்தப்போவதில்லை. எமது படைக் கட்டுமானங்களை நாம் கட்டியெழுப்புவது மக்களின் பாதுகாப்புக்கும் கௌரவமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்காகவுமே - என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

நாயாற்றில் நேற்று மீனவர் மீது தாக்குதல்

கிளிநொச்சி,ஓக.6

முல்லைத்தீவு, நாயாறுப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினரின் ''டோறா'' படகுகள் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்று அதிகாலை 5.30 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பபாணம்,ஓக.6

நாடு முழுவதும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் 76 பரீட்சை நிலையங்களில் 9 ஆயிரத்து 200 மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என யாழ்.கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (1)

பொலிகண்டி கிழக்கில் சனியன்று படையினர் இரவிலும் தேடுதல்

உடுப்பிட்டி,ஓக. 6

பொலிகண்டி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவிரவாகப் படையினர் சுற்றிவளைப்புச் சோதனை நடத்தினர். அன்று பிற்பகல் 4 மணிக்கு சுற்றிவளைப்புத் தொடங்கப்பட்டு இரவு 8 மணி வரை தேடுதல் நடத்தப்பட்டது.

அந்தப் பகுதியை மாலையில் திடீரென சுற்றி வளைத்த படையினர், ஊரடங்கு நடைமுறைக்கு வந்த பின்னரும் வாகன வெளிச்சத்தில் தேடுதலைத் தொடர்ந்தனர்.

பொலிகண்டி பிரதான சமுர்த்தி அலுவலகத்துக்கு முன்பாக கூடுமாறு சகலரையும் படையினர் பணித்தனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

சட்டவிரோதக் கொலை, காணாமற்போகச் செய்தல் போன்ற கொடூரங்களுக்கு

இலங்கை அரசைக் கடுமையாகச் சாடும் மனித உரிமை அமைப்பின் அறிக்கை இன்று

நியூயோர்க், ஓக 6

இலங்கையில் இடம்பெறும் சட்டவிரோதப் படுகொலைகள், ஆள்களை வல்வந்தமாகக் காணாமற்போகச் செய்தல் மற்றும் அதுபோன்ற மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசைப் பொறுப்பாக்கி, கடுமையாகக் குற்றம் சுமத்தும் நீண்ட அறிக்கை ஒன்று நியூயோர்க்கிலிருந்து வெளியாகின்றது.

பிரபல்யம் பெற்ற சர்வதேச மனித உரிமை அமைப்பான 'மனித உரிமை கள் கண்காணிப்பகம்'(Human Rights Watch)என்ற நிறுவனமே இந்த அறிக்கையை இன்று பகிரங்கப்படுத்தவிருக்கின்றது என நம்பகரமாகத் தெரியவருகிறது.

'மீண்டும் யுத்தத்துக்கு: முற்றுகைக்குள் மனித உரிமைகள்' - என்ற தலைப்பிலான இந்த 129 பக்க அறிக்கை பெரும்பாலும் இலங்கை அரசுத் தரப்பினதும் அதனுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படையான கருணா குழுவினதும் அதிகாரத் துஷ்பிரயோகக் கொடூரங்களை விலாவாரியாக விவரிக்கின்றது எனக் கூறப்படுகிறது.

இராணுவம் மற்றும் படைகளின் 'ஊத்தை' வேலைகளுக்கு அரசுத் தலைமை அனுமதி அளித்திருப்பதையும், கருணா குழு

(08 ஆம் பக்கம் பார்க்க)

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் திரண்டு செயற்பட வேண்டும்

செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,ஓக. 5

குடாநாட்டில் உணவு மற்றும் ஏனைய பொருள்களுக்கான விலைவாசி உயர்வுகளைக்கட்டுப்படுத்த சகல பொதுமக்களும் ஒன்றுதிரண்டு செயற்படவேண்டும். எல்லோரும் சேர்ந்து நடவடிக்கை எடுத்தால் மட்டுமே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு சமூக சேவைகள், சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பொதுமக்கள் அத்தியாவசியப் பொருள்களைப்பெறுவதில் எதிர்கொள்ளும் கஷ்டங்கள், சிரமங்கள் மற்றும் மக்களின் தேவைகளைப் பத்திரிகையாளர்கள் எமது கவனத்திற்கு கொண்டுவரும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகளைதக்க நேரத்தில் எடுக்கக் கூடியதாக இருக்கும் என்று அமைச்சர் சொன்னார்.

ஊடக வியலாளரிடம் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

அரிசி, சீனி, கோதுமை மா, பால்மா, பிஸ்கட், உப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களைப் போதியளவு முன்னுரிமை அடிப்படையில் தருவித்து விநியோகிப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

ஐ.நா. பொதுச்சபையில் மஹிந்த உரையாற்றுவார்

கொழும்பு, ஓக 6

நியூயோர்க்கில், ஐ.நா. தலைமையகத்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நாவின் 62ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாகக் கலந்து கொண்டு உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

தமிழக மக்கள் அன்பளிப்புச் செய்த பொருள்கள் படகு மூலம் செப். 12 இல் யாழ்ப்பாணத்துக்கு

மத்திய அரசு அனுமதி அளிக்காததால் இந்த ஏற்பாடு

சென்னை, ஓக. 6

யாழ்ப்பாணத்தில் பட்டினியால் வாடும் மக்களுக்காக சேகரித்த மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அடுத்த மாதம் (செப்ரெம்பர்) 12 ஆம் திகதி படகுகள் மூலம் எடுத்துச் சென்று நேரடியாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு நேற்று இந்த முடிவை மேற்கொண்டது.

திருச்சி, விழுப்புரத்தில் நேற்று நடைபெற்ற கண்டன மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் பட்டினி கிடக்கும் ஈழத் தமிழர்களுக்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அனுப்ப அனுமதி கொடுக்காத இந்திய மத்திய அரசைக் கண்டித்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

இன்று வரும் ஐ.நா. அதிகாரி யாழ்., மட்டக்களப்புக்கு விஜயம்

வன்னிக்குப் போக அனுமதி இல்லை

கொழும்பு, ஓக. 6

ஐ.நாவின் மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகால நிவாரணப்பணி இணைப்பாளர் பொறுப்புகளை வகிக்கும் கீழ் நிலைச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று கொழும்பு வருகின்றார் .

மனிதநேயப் பணிகள் மிக இக்கட்டுக்கு உள்ளாகியிருக்கும் யாழ். குடாநாடு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு அவர் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவார்.

ஆனால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கோ, கிளிநொச்சிக்கோ அவர் செல்வதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிகின்றது.

கடந்த ஆண்டு மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 'பட்டினிக்கு எதிரான இயக்கத்தின்' ஊழியர்களான 17 தொண்டுப் பணியாளர்களினதும் நினைவு நிகழ்வுகளிலும் ஜோன் ஹோம்ஸ் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில்ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 6

பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவசமாக அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை அரசு வழங்கவேண்டும் என்று கோரி ஜே.வி.பி. சார்பு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் மலையகத்தை உள்ளடக்கிய 13 மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டனர்.

பதுளை நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவரும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்தியாரட்ன மற்றும் ஜே.வி.பியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் பங்கு பற்றினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நானூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல், ஹட்டன், மாத்தறை, தெனியாய, இரத்தினபுரிநகர், மத்துகம, கேகாலை நகர், கண்டிநகர், காலிநகர், மாத்தளை, ரத்தோட்டை, அவிசாவளைநகர் உள்ளிட்ட 13 இடங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நேற்று இடம்பெற்றன.

இம்மாதம் 14 ஆம் திகதி இதே கோரிக்கையை முன்வைத்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஜே. வி. பி. தீர்மானித்துள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் பங்குபற்றுவர் என்று ஜே. வி. பி. தெரிவித்துள்ளது. (சி)

சட்டவிரோத மின்சாரம்: 3 பெண்களும் கைது

யாழ்ப்பாணம்,ஓக. 6

புன்னாலைக்கட்டுவன், ஈவினைப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சார இணைப்புப் பெற்ற 3 பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

சுன்னாகம் பொலிஸாரும் மின்சார சபை அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது இவர்கள் சிக்கினர்.

நால்வரும் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ-1)

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியைத் தலைமையகமாகக் கொண்டு தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட 13 மொழிகளில் வெளியாகும் "த சண்டே இந்தியன்" வார இதழுக்கு (ஒகஸ்ட் 5, 2007) சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

கேள்வி: மகிந்த ராஜபக்சவுடன் இனி பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம் என்று ராய்ட்டர்ஸ்க்கு அளித்த 'பேட்டியில் அறிவித்திருந்தீர்கள். அதேபோல் இலங்கையின் முக்கிய பொருளாதார நிலைகளைத் தாக்க உள்ளதாகவும் கூறியிருந்தீர்கள். இதனை புலிகளின் யுத்த பிரகடனமாக கருதலாமா?

பதில்: மகிந்த ராஜபக்ச அரசு பகிரங்கமாகவே தமிழர் தாயகத்தின் மீது ஒரு யுத்தப் பிரகடனத்தைச் செய்து அவ்வாறான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்ற நிலையில் நாம் அமைதிப் பேச்சுக்களைப் பற்றிக் கதைபதென்பது எந்தவிதத்திலும் பொருத்தமாக இருக்கும் என்று நம்பவில்லை. அந்த வகையில் இனிமேல் அவர்களது இராணுவ முனைப்புக்களைச் செயலிழக்கச் செய்து அவற்றை முடக்குவதற்குரிய எமது தாக்குதல், உத்திகளை தீவிரப்படுத்தி எமது தற்காப்பு உத்திகளை முழு அளவில் செயற்படுத்தவே எண்ணியிருக்கின்றோம்.

கேள்வி: சம்பூர், வாகரை தொடங்கி தற்போது குடும்பிமலை (தொப்பிக்கல) என புலிகள் தரப்புக்கு அண்மைக்காலமாக பின்னடைவு ஏற்பட்டிருப்பது போலத் தோன்றுகிறதே... கிழக்குமாகாணத்திலிருந்து முற்றிலுமாக புலிகளை விரட்டிவிட்டோம் என்றும் அதை தேசிய தினமாக கொண்டாடுவதாகவும் இலங்கை அரசு கூறுகிறதே?

பதில்: கிழக்கில் எமது தாக்குதல் உத்தியினையே நாம் மாற்றியிருக்கின்றோம். எமது தந்திரோபாயத்தினை மாற்றியுள்ளோம். அங்குள்ள புவியியல் அமைவு, சூழ்நிலை கருதி அவை மாற்றப்பட்டிருக்கின்றனவே தவிர எமது படைக்கட்டுமானம் எவையுமே அங்கிருந்து அகற்றப்படவில்லை. பின்வாங்கிவந்ததாகவும் இல்லை. இனிவரும் காலங்களில் அங்கு எமது தாக்குதல்கள் தீவிரமடையும். சிறிலங்கா இராணுவம் பல தடவைகள் கிழக்கிலே பிரதேசங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகவும் பின்னர் அவர்கள் விரட்டியடிக்கப்படுவதாகவும் காலம் காலமாக மாறி மாறி இடம்பெற்றிருக்கின்றது. இதனையே பெரும் கொண்டாட்டமாக கொண்டாடுவதென்பது சிங்கள மக்கள் மத்தியில் இன வாதத்தை கிளப்பி விடுவதும் தற்போது சிங்கள மக்கள் மத்தியில் இந்தப் போரினால் எழுந்துள்ள அன்றாட வாழ்வியல் நெருக்கடிகளை, பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்காகவுமே தவிர அதனைப் பெரியொரு வெற்றியாக யாரும் கருதவுமில்லை. அவர்களே அதனைப் பெரிதாக்கி கொண்டாடுகின்றார்கள். அத்தோடு தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்கள மயப்படுத்த முனைவதும் மகிந்த அரசின் நோக்கமாகும். இதை முறியடிப்பதற்கான தீவிர செயற்பாடுகளில் எமதும் எமது மக்களினுடைய செயற்பாடுகளும் தீவிரமடையும். சிங்கள படைகளின் வெற்றிக் கொண்டாட்டங்கள் [illegible] வில் சிங்களப் படைகளுக்கான பேரழி[illegible]வே முடியும்.

கேள்வி: இலங்கை இரா[illegible]வத்தின் தாக்குதலை உங்களது கட்டுப்பாட்டில் [illegible] வடக்குப் பகுதி தாக்குப் பிடிக்குமா?

பதில்: வடக்குப் பகுதி மட்டுமல்ல தமிழர் தாயகம் எங்கிலும் சிறிலங்கா இராணுவத்தின் தாக்கு தல்கள் விரிவடையும் நிலையில் அவை கடந்த காலங்கள் போலவே முற்றாக செயலிழக்கச் செய்யப்பட்டு தோற்கடிக்கப்பட்டு விரட்டியடிக்கும் நடவடிக்கையில் நாம் வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கின்றோம். தற்போது சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு முகம் கொடுப்பதற்கு தமிழ் மக்களும் நாமும் முழு அளவில் தாயாராகி வருகின்றோம். விரைவில் இதற்கான பதிலடியை கொடுப்போம்.

கேள்வி: இலங்கை இராணுவத்துக்கு உங்கள் முகாம்கள் மற்றும் திட்டங்கள் பற்றி கருணா குழுவினர் தகவல் கொடுப்பதாகவும் கிழக்கில் இராணுவத்தின் வெற்றிக்கு அது உதவியாக இருந்ததாகவும் சொல்கிறார்களே...

பதில்: சிறிலங்கா இராணுவம் கருணா குழு போன்ற இந்த தேசவிரோத சக்திகளிடருந்து இப்படியான தகவல்களை பெறுவதென்பது உண்மைதான். அவை சிறிலங்காப் படைகளின் தாக்குதல்களுக்கு உதவியிருக்கலாம் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

கேள்வி: உங்களது விமானங்கள் சாதாரணமான விமானங்கள் என்றும் இதற்கெல்லாம் அஞ்சப்போவதில்லை என்றும் இலங்கை அரசாங்கம் கூறுகிறதே?

பதில்: எமது விமானம் சாதாரண விமானமாக இருந்தால் அதனைச் சிறிலங்கா அரசாங்கப் படைகள் சுட்டு வீழ்த்தியிருக்கலாம். அந்த அரசின் அதி உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப படுத்தப்பட்ட கோட்டைக்குள்ளேயே சென்று நாம் தாக்கு தல்களை மேற்கொண்டு வெற்றிகர மாக திரும்பியிருக்கின்றோம். இப்படிக் குறிப்பிடுபவர்கள் அதனைத் தடுத்திருக்கலாமே!. மூன்று தடவைகளுக்கு மேல் நாம் தாக்குதல் நடத்தியிருக்கின்றோம். இவர்களின் இயலாமையை வைத்துக் கொண்டே நீங்கள் உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

கேள்வி: உங்களது விமானப் படையால் இந்தியாவுக்கு ஆபத்து என்று கூறப்படுகிறதே?

பதில்: நிச்சயமாக ஒருபோதுமில்லை. எமது கடற்படையாலோ, விமானப் படையாலோ அல்லது தரைப்படையாலோ எந்த விதமான எமது கட்டமைப்புக்களாலேயோ ஒருபோதும் எந்த அயல் நாட்டுக்கும் தீங்கேற்படுத்தப்போவதில்லை. எவருக்குமே நாம் அச்சுறுத்தலாக இருக்கப்போவதில்லை. எமது படைக்கட்டுமானங்களை நாம் கட்டியெழுப்பியது எமது மக்களின் தற்பாதுகாப்புக்காகவே. எமது மக்களின் பாதுகாப்பு, சுதந்திரமான கௌரவமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கானதே. ஆகவே எமது மக்கள் மீது ஆக்கிரமிப்பை தொடுக்கின்ற எதிரிக்கு எதிராக அவை பயன்படுத்தப்படுமே தவிர எந்த எவருக்கும் அச்சுறுத்தல் விடுப்பதாக அவை அமையாது. அந்த வகையில் இது தவறாக முன்னெடுக்கப்படுகின்ற ஒரு பொய்ப்பிரச்சாரமே ஆகும்.

கேள்வி: உங்களின் தலைவர் பிரபாகரன் அவர்களின் மகன் இயக்கத்தில் என்ன பதவி நிலையில் உள்ளார்? விமான உருவாக்கத்தில் அவர் பங்கெடுத்தார் என்றெல்லாம் கூறப்படுகிறதே? ஏன் அவரைப் பற்றிய தகவல்களை பகிரங்கப்படுத்தவில்லை? அனைவரும் அறிந்து கொள்வார்கள் அல்லவா?

பதில்: எமது அமைப்பில் பதவி நிலைகளை நாம் முதன்மைப்படுத்துவதில்லை. கடமைகளும் அர்ப்பணிப்புக்களுமே எப்போதும் முதன்மைப்படுத்தப்படும். அந்த வகையில் எமது தேசியத் தலைவரது மகனும் எமது விடுதலை இயக்கத்தில் ஒரு முக்கியமான பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்றார். ஆகவே அதில் பெரிதுபடுத்திக் கூறக் கூடியவாறு ஒன்றுமில்லை என்றே நினைக்கின்றேன்.

கேள்வி: ஈழத் தமிழர் பிரச்சினையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வெளிப்படையாகவே உங்களை எதிர்த்து வருகிறார். ஆகையால் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர்.- தற்போதைய முதல்வர் கருணாநிதி ஆகியோர் குறித்த உங்களது கருத்து?

பதில்: தமிழகத்தில் சில தமிழகக் கட்சித் தலைவர்கள் சில தவறான சக்திகளினுடைய தவறான தகவல்கள், பிரச்சாரத்தின் அடிப்படையில் தவறான புரிதல்களைப் பெற்றிருக்கின்றார்கள். நிச்சயமாக அவர்களும் விரைவில் மனம் மாறி ஈழத்தமிழ் மக்களினுடைய சுதந்திரமும் விடுதலையும் அவர்களின் உரிமை என்ற வகையில் சகலரும் இந்தப் போராட்டத் தினுடைய தார்மீக அடிப்படையைப் புரிந்துகொண்டு ஒன்றிணைந்து உதவுவார்கள் என்று தான் நாங்கள் நம்புகின்றோம். தமிழ் மக்களி னுடைய இருப்பையும், உயிர் வாழ்தலிற்கான அவர்களுடைய வாழ்வுரிமையினையும் எந்தவொரு தமிழர் என்று உணர்வு கொண்டவர்களும் மறுதலிக்கமாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

கேள்வி: இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவி செய்யாவிட்டால் இலங்கையில் பாகிஸ்தான் மற்றும் சீனாவின் தலையீட்டுக்கு வழிவகுக்கும் என்று கூறப்படுகின்றதே. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

பதில்: சிங்கள தேசத்திற்கும், சிங்கள வெறி பிடித்த அரசுகளுக்கும் இன்று பல நாடுகள் இராணுவ பொருளாதார உதவிகளைச் செய்து வருகின்றன. இரண்டு நோக்கங்களுக்காக செய்து வருகின்றன. ஒன்று மத பண்பாட்டு தொடர்பு உறவு என்ற வகையிலும் மற்றையது பிராந்திய பொருளாதார அரசியல் நலன்களின் அடிப்படையிலும் உதவிவருகின்றார்கள்.

இந்தியாவைப் பொறுத்த வரையிலும் அதனைச் சிங்களத் தலைமைகளும் சிங்கள மக்களும் தமது எதிரிகளாகவே கருது கின்றார்கள். ஏனெனில் தமிழ்நாடு என்கின்ற தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நிலப்பரப்பிற்கு அண்மையாக அதனுடன் சகலவற்றிலும் தொடர்பு கொண்டவர்களாக எமது மக்கள் இருப்பதாகும்.

ஆயினும் அத்தகைய பிராந்திய ரீதியிலான உதவிகள் எம்மை வந்தடையக்கூடாது என்பதற்காகவே இன்றைய சிங்களத் தலைமைகள் தமக்கும் இந்திய அரசுக்குமிடையில் நல்லுறவு இருப்பதுபோல எப்போதும் காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றது.

இலங்கைத் தீவில் தமிழினத்தையே முற்றாக இன அழிப்புச் செய்து அவர்களுக்கான தாயகக் கோட்பாட்டைச் சிதைத்து இல்லாமற் செய்வதே அரசின் உண்மை நோக்கமாகும். அதற்காக அவர்கள் எத்தகைய பிராந்திய விரோத சக்திகளிடமும் கையேந்துவதற்கு தயங்கியதில்லை. அதனொரு வெளிப்பாடே தற்போதைய நிலைமை.

ஆகவே அதனை இல்லாமற் செய்வதாகக் கருதிக்கொண்டு பிராந்திய அரசுகள் சிறிலங்கா அரசின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு கை கொடுப்பதென்பது மேலும் இப்பிராந்தியத்தின் சகஜ நிலையை கேள்விக்குள்ளாக்குமே தவிர தீர்வாக அமையாது.

மாறாக மற்றைய நாடுகளைப் போலவே இந்திய அரசும் தனது நாட்டினது இன மத பண்பாட்டு தொடர்பு உறவுவினது பாம்பட்டும் பிராந்திய பொருளாதார அரசியல் நலன்களின் அடிப்படையிலும் தமிழர்களின் வாழ்வுரிமையை அங்கீகரித்து அவர்களுடைய தாயகத்தில் அவர்களுக்கு கௌரவமான சுதந்திரமான இருப்பை உறுதிப்படுத்துவதொன்றே மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும் என்றே நான் நம்புகின்றேன் - என்றார் அவர்.

A/L 2007 மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

* * * * *

A/L பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கு IIS, IIS City Campus நிறுவனத்தினர் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறார்கள்.

இப்பரீட்சை உங்களுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக!!

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831

IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 8060
Email: iiscc@sltnet.lk

கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தின் காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் திருமதி சரஸ்வதி தியாகராஜன்அவர்களின் பாசமிகு கணவரும் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசானுமாகிய

ஆறுமுகம் தியாகராஜன்

அவர்கள் காலமான செய்தி கேட்டு நாம் மிக அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் பிரிவில் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காணிப் பதிவக உத்தியோகத்தர்கள்
பருத்தித்துறை.

தவறிவிட்டது

இல. 148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குரிய சுப்பிரமணியம் இராசகுமாரன் என்பவரின் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சிட்டை, இராணுவ அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய நீல நிற பேர்ஸ் நுணாவிலில் இருந்து செம்மணியூடாக யாழ்ப்பாணம் வரும்போது 05.08.2007 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

றாபா பன்முக வர்த்தகர்,
104, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். அல்லது
ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்,
170, கண்டி வீதி, சாவகச்சேரி.

விற்பனைக்கு

எம்மிடம் P4 கொம்பியூட்டர் (Canopus DVS Storm - 2) வீடியோ காட் பொருத்தியது மற்றும் Panasonic - DVX100 வீடியோ கமரா, என்பவற்றுடன் Nickon fm-2 கமராக்கள் மற்றும் புகைப்படத் துறைசார் பொருள்கள் (பாவித்ததும் புதியதும்) விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு:

செல்வா மொபைலிங் போட்டோ கிறாஃபி
பருத்தித்துறை வீதி, 3ஆம்கட்டை யாழ்ப்பாணம்
T.P. 0777112419, 0776042901 (62616)

விமான பொதிகள் சேவை

உங்கள் பொதிகளை யாழ் –கொழும்பு அல்லது கொழும்பு – யாழ் தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

கிளியரன்ஸ் இல்லாத பொருட்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்

கொழும்பு – யாழ் – 1Kg 250/=
[illegible] – 5Kg 200/=

[illegible] GROUP OF COMPANIES INTERNATIONAL COURIER SERVICE
35, STATION RD, MOUNT LAVINIA. TEL: 077 3846998, 0114 542190
11, VIHARA LANE, COLOMBO 06. TEL: 011 4961196, 077 3561891

மரண அறிவித்தல்

பொன்னையா இராசரத்தினம் (இராசையா)

கோப்பாய் தெற்கு, பழைய வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் 01.08.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் இராசமணி, அமரர் தங்கமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் கைதடி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தேவமனோகரி (கனடா), ஜெகதீஸ்வரி (வதனா), நவரத்தினராசா (கனடா), குணரத்தினராசா (பிரான்ஸ்), யோகரத்தினராசா (யோகு), புஸ்பமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசசேகரம், பரமேஸ்வரன் (தம்பி அண்ணை), மல்லிகாதேவி, வனஜநாயகி, விஜயலட்சுமி, உமைபாகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீவா, ரஜீவன், பவதாரணி, துளசிமாறன், நமயா, கஜித், கஜன், பிறையன், அஜித்தன், அபிலாசன், கரோலினா (மதுஷ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2007) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (63382)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு இனிமேல் பிரதேச செயலகங்களின் ஊடாகவே

யாழ்ப்பாணம்,ஓக.6

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுப் பணிகள் இம் மாதம் முதல் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன.

குடாநாட்டின் உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு இதுவரை காலமும் கொழும்பிலிருந்தே ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டு வந்தன. எனினும் வவுச்சர்கள் உரிய வேளையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்காது தாமதமாகி வந்தன.

இவ்விடயம் குறித்து வடமாகாண உள்ளூராட்சி ஓய்வூதியர் சங்கத்தினரும், யாழ். அரச அதிபரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசினார்.

ஏனைய ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுவது போல பிரதேச செயலகங்கள் ஊடாக ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதன் பயனாக இம் மாதம் முதல் உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்கள் பிரதேச செயலகங்களால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இம் மாதத்திற்குரிய ஓய்வூதியத் தினம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(202-207)

ஆலய உள்வீதி புனரமைப்பு

சுழிபுரம்,ஓக.6

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலய தெற்குப்பக்க உள்வீதி மண்டபக் கூரைத் திருத்தம் செய்யும் வேலை நடைபெற்று வருகின்றது. ஆலய பரிபாலன சபையின் மேற்பார்வையில் திருத்த வேலைகள் நரடபெறுகின்றது.

மழை காலம் வருவதற்குள் வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

கரட், பீற்றூட் மரக்கறிகளில் இருந்து புதுவகை 'யூஸ்' தயாரித்து அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஓக.6

இதுவரை காலமும் கறி சமைப்பதற்கு மட்டும் பயன்பட்டு வந்த கரட், பீற்றூட் ஆகிய மரக்கறிகளைப் பயன்படுத்தி உள்ளூர் தொழில்நுட்ப முறையில் 'யூஸ்' வகைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உரும்பிராய் கமநல சேவை நிலையத்தினரே இந்த சுவையும் தரமும்மிக்க 'யூஸ்' தயாரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் புதிய உற்பத்தியின் அறிமுக விழா அண்மையில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்றது.

உரும்பிராய் விவசாயப் போதனாசிரியர் எம்.யோகநாதன் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு புதிய வகை 'யூஸ்'களை வழங்கினார்.

இந்த 'யூஸ்' தயாரிப்பின் உற்பத்தி அளவையும் தரத்தையும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்நிகழ்வில் விரிவாக ஆராயப்பட்டது.

கரட் யூஸ், பீற்றூட் யூஸ், குரக்கன் மாவில் செய்யப்பட்ட சிற்றுண்டி வகைகள் என்பவற்றை பாடசாலை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தி விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக உரும்பிராய் விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார்.

(202-160)

வலி.தென்மேற்கில் விறகுக்குத் தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு,ஓக.6

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் விறகுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுவரை மண்எண்ணையைப் பயன்படுத்தி சமையல் செய்து வந்த பல குடும்பங்கள் தற்போதைய மண்எண்ணையின் அதி உச்ச விலையேற்றத்தின் காரணமாக விறகு மூலம் சமையலை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதன் காரணமாக விறகுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதன் விலையும் அதிகரித்து வருகின்றது.

இதேவேளை- இப் பிரதேசத்தில் இலங்கை மின்சார சபையினர் இரவில் அடிக்கடி நீண்டநேரம் மின்வெட்டை நடைமுறைப் படுத்தி வருவதால் இரவு வேளைகளில் மக்கள் மண்எண்ணைய் விளக்குகளையே பயன்படுத்தி வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மண்எண்ணையின் விலை ஏற்றம் காரணமாக வசதி குறைந்த குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (203-135)

வாகனங்களை நிறுத்த இடமின்றி மக்கள் சிரமம்

சங்கானை,ஓக.6

சங்கானை மக்கள் வங்கிக்கிளை, பாதுகாப்பு படையினரின் காவல் அரணுக்கு அண்மையில் அமைந்துள்ளமையால் வாகனங்கள் எதனையும் அப்பகுதிகளில் நிறுத்தவேண்டாம் என்று படையினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக வங்கிக்கு வருவோர் வாகனங்களை நிறுத்துவதற்கு இடமின்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் மரக்கறிச் சந்தையும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-29)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற மெதடிஸ்த தினவிழாவில் இளைப்பாறிய அதிபர் திருமதி எஸ். தவரட்ணம் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதை முதலாவது படத்திலும்-

மெதடிஸ்த திருச்சபையின் கட்டைவேலி நெல்லியடி முகாமைக்குரு அருட்திரு.ஏ.அழகராசா அடிகளார் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:கட்டைவேலிச் செய்தியாளர்)

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.6

ஆனைக்கோட்டை வீரமாபிடாரி அம்பாள் ஆலய பெருத்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.6

வண்ணை வடமேற்கு நொச்சியம்பதி பக்திரகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (203)

* * *

முன்னேஸ்ரம் ஆலய பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 28ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.6

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய வருடாந்த தேவி பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவில் தேர்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமையும் இடம்பெறவுள்ளன. (203-73)

* * *

வலிதென்மேற்கு,ஓக.6

பணிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருவிழா காலத்தில் தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (203-135)

* * *

வடமராட்சி,ஓக.6

பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவசுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை கார்த்திகை திருவிழா நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் இடம்பெற்று பின்னர் சிறப்புப் பூஜைகளுடன் கார்த்திகேயர் வெளிவீதியுலா வருதல் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம், ஓக.6

திருநெல்வேலி சிவன் ஆலய அம்பிகை பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

வலி தென் மேற்கு,ஓக.6

சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திருவிழா நடைபெற்று எதிர்வரும் 14ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு நற்கருணை திருவிழா நடைபெறும். மறுநாள் 15ஆம் திகதி காலை 6.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனை தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும்.

இந்த ஆலயம் நிறுவப்பட்டு 50 வருடங்கள் நிறைவு பெறுவதை முன் னிட்டு திருவிழாக் காலத்தில் விசேட நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு ஜூட் நிக்சன் அடிகளால் மேற்கொண்டுள்ளார். (203-135)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.6

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா 16ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.6

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திருவிழா 12 நாள்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆவணி திருவோணத்தில் துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.



திருவிழா நாள்களில் பெண்கள், குழந்தைகள் நகைகள் அணிந்து வருவது கூடியளவு குறைத்துக் கொள்ளவேண்டும்.

ஆலய தரிசனம் முடிவடைந்ததும் அனைவரும் நேரகாலத்துடன் தமது வீடுகளுக்குச் செல்லவேண்டும்.

ஆலய வீதிகளில் இரவு நேரங்களில் தங்குவது தவிர்க்கப்படவேண்டும் என்றும்- ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (203-160)

நிகழ்வுகள்

வலி தென்மேற்கு,ஓக.6

யாழ் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் இன்று திங்கட்கிழமை முதல் 10ஆம் திகதி வரை நவீன உள்ளூர் ஊடகவியல் என்னும் பொருளில் தொழிலிடை கற்கைநெறி நடைபெறவுள்ளது.

சுவீடன் ஊடக கல்வி நிறுவனத்தை (Fojo) சேர்ந்த கிளாஸ்தோர் (Clasthor) இக் கற்கை நெறியை நடத்துவார்.

பயிற்சி முடிவில் பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (203-135)

* * *

காரைநகர் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தும் முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

காரைநகர் பிரதேசத்தில் உள்ள 14 முன்பள்ளிகளின் சிறார்கள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (203-73)

* * *

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரதேச மட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை மு.ப 10 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-73)

* * *

கைதடி,ஓக.6

சாவகச்சேரி பிரதேச சபையினால் கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை கைதடி பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற இருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

எனவே, இக்கூட்டத்தில் அவ்வப்பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். இக்கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெற இருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டபோதும் தற்போது தேவை காரணமாக 7ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(203-75)

யாழ்.மாவட்டத்தில் 193 காச நோயாளர்

குருநகர்,ஓக.6

யாழ்.மாவட்டத்தில் 193 காசநோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இந் நோய் மேலும் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலை, குருநகர் பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் காசநோய் சிகிச்சைகளை நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய அஞ்சலி

லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியராக, அதிபராக ஐம்பது வருடங்களாக தன்னலம் கருதாது ஆயிரத்திற்கு மேற்பட்ட வைத்தியர்களை அனுபவக் கல்வி அறிவூட்டி அவனியில் சிறக்க வைத்தவரும், எனது ஆத்மாத்த குருவுமாகிய வைத்தியகலாநிதி

A.V. இராஜரட்ணம்(A.V.R)

29-07-2007 ஆம் திகதி காலமாகிய செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றேன். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Dr. செ.பரமசிவம்பிள்ளை D.A.M.(Cey)
வைத்திய பொறுப்பதிகாரி, வலி.மேற்கு பிரதேச சபை,சுழிபுரம். (63358)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 10 - 1958

உதிர்வு 18 - 07 - 2006

அமரர்

ஐயம்பிள்ளை வரதராஜன்

திதி: 06-08-2007

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (06-08-2007) திங்கட்கிழமை நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீமுருகன் கபே, தேனீர்க்கடை,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (63179)

- குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

சின்னத்தம்பி மோகனதாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மோகனதாஸ் (02.08.2007) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி- யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், அருளானந்தம் (தினகரன் பத்திரிகை முன்னாள் ஆசிரியர்), லலிதா (வெளிநாட்டு அமைச்சு)), சறோஜா (பிரான்ஸ்), சந்திரா(பிரான்ஸ்), விவேகானந்தா(ஆசிரியர்), றணிதா(இந்தியத் தூதரகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சந்தானகோபால் (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி, றாஜேந்திரன்(இந்தியத் தூதரகம்) ஆகியோரின் மைத்துனரும் அருண், அரவிந்தன் ஆகியோரின் சிறியதந்தையும் அபிநயாவின் பெரியதந்தையும் செல்வி, றெமி பவிதா, பாகவி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளைமறுதினம் (08.08.2007) புதன்கிழமை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (63372)

தகவல்:
சி.விவேகானந்தா
(சகோதரன்).

சந்தாம்பிள்ளை சகாயசீலன்

(சிரேஸ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மன்னார், வட்டக்கண்டல், பெருமாள் கட்டைப் பிறப்பிட மாகவும் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தாம்பிள்ளை சகாயசீலன் நேற்று (05-08-2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சந்தாம்பிள்ளை - புஸ்பமேரி தம்பதியரின் ஏகபுத்திரனும் திருமதி ராஜினி சகாயசீலன் (ஆசிரியர், யாழ்.திருக் குடும்பக் கன்னியர்மடம்) அவர்களின் அன்புக் கணவரும் செரூபி, செரீனா(மாணவிகள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மேசாக் செர்வின் (மாணவன், பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr.செ.ராஜேந்திரா -கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி டேவின் டபரேரா (மன்னார்), மேரி மக்டலின் டபரேரா (மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி றஜாந்தினி ஹர்சன் சேதுகாவலர் (ஆசிரியர், சென் தோமஸ் கல்லூரி, கொள்ளுப்பிட்டி) அவர்களின் மைத்துனரும் ஹர்சன் சேதுகாவலர் (HNB, கொழும்பு) அவர்களின் சகலனும் சுபோஜினி, சுரேன், வினோத், சுயாத், வேஜின் பிரவீணா ஆகியோரின் அன்பு மாமனும் ஹரேன், மதுரியின் அன்புப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06-08-2007) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

253/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777286174 (63380)

தகவல்:
திருமதி ராஜினி சகாயசீலன்
(மனைவி).

இது உங்க ஏரியா

Select Your Right Choice

Main Boards

Asrock Intel Quad Core	6250/-
Asus Intel P5PE-VM	8900/-
Biostar Intel 945 DDR II	7900/-
GigaByte intel C2D DDRII	7750/-
Intel Original Essential	13000/-
Intel Original Classic	18750/-

Processors

Intel Celeron D 2.8 BOX	7000/-
Intel P4 HT 3.0/2M BOX	11900/-
Intel Core 2 Duo BOX	23000/-

Hard Disks

40 GB Sata / IDE	5950/-
80 GB Sata / IDE	6900/-
160 GB Sata 3.0 Gbps DT	8900/-
250 GB Sata 3.0 Gbps DT	10900/-

Monitors

Intex 15" Digital CRT	13750/-
ViewSonic 15" CRT	15250/-
HP 17" Digital CRT	18000/-
IBM 15" LCD	26000/-
DaeWoo 15" LCD	24000/-
Panora 17" LCD	27500/-
ViewSonic 17" LCD Wide	29500/-

Printer & Scanner

HP DeskJet D1460	8250/-
Canon LaserShot 2900	22000/-
Epson LQ300+ II	26000/-
Epson Lq2170 A3	75000/-
Canon Lide25 Scanner	8250/-

கையிருப்பிலில்லாத பொருட்களுக்கு விலை குறிக்கப்படவில்லை

Standard Keyboard	800/-
Multimedia KB Standard	1000/-
Multimedia KB Large	1500/-
Standard Wheel Mouse	300/-
Optical Mini Ps2	600/-
Optical Mini USB 700/-,	1500/-
Optical Glaser	1600/-
Multimedia Speaker	800/-
ATX Quality Casings	4800/-
Floppy Drive 1.44	1300/-
TvTuner Internal	4750/-
TvTuner Combo External	4900/-
Blank CD Bulk AL	21/-
Extr HDD Sata Encl	6000/-
Extr CDD/HDD Encl	5000/-
HDD HIFI Cooler Fan	4000/-
AGPVGA 128MB	7750/-
PCI Express 256MB	9500/-
MODEM	1200/-
NETWORK CARD	1250/-
SOUND CARD	1500/-

போட்டியாளர்கள் சொல்வர் விலை குறைவென்பதால் பழையது என்று,சகல பொருட்களையும் இணைப்புகளையும் நீங்களே பார்வையிடலாம்

IBM Lenovo A55

Intel Pentium D Dual Core 3.0, 512 MB DDR2 IBM Memory, 80 GB Sata Dual Speed HDD, DVD/CD-RW Combo Drive,FDD 17" IBM COLOR CRT Monitor & Other Facilities.

3 Years Warranty

HP Compaq

Intel Mobile Pentium D Dual Core 1.73Ghz,512 Mb Mobile DDR Memory, 80 Gb HDD sata & DVDReWritter,WI-FI, Ethernet, Modem, Out Speaker, External Video out and etc.

Our Assembled

2.8Ghz/256Mb/80gb/Cdrom/15"	37900/-
3.0/2m உடன்	43900/-
3.0/4m Dual Core உடன்	48400/-
Core 2 Duo உடன்	53900/-

UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Tel: 021-4908120

வசீகர தோற்றத்திற்கு

சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)



வெண்சந்தனம், மராஷ்ரள், தங்கபஸ்பம், கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தோல், முகப்பரு, தழும்புகள், பரு தோன்றை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியை தவிர்த்து தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உடல், வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சருமநோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.

சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் சவரவலி விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத் தரும்.

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

யாழ்.கோட்டை ஸ்ரீ முனிஸ்வரன் தேவஸ்தானம் ரதபவனி நேரமாற்றம்

நாளை(07-08-2007) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு - வசந்த மண்டபப் பூஜையும் அதைத் தொடர்ந்து ரதபவனி உற்சவமும் அன்னதானமும் நடைபெறும்.

நாளைமறுதினம் (08-08-2007) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைரவர் சாந்தியும் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

(63186) யாழ்.கோட்டை தேவஸ்தானம்.

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 07-07-2007 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த

எமது குடும்பத் தலைவி

திருமதி பரமசாமி சேதுப்பிள்ளை

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06-08-2007) திங்கட்கிழமை முற்பகல்11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

402, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். (67376)

-குடும்பத்தினர்.

ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 01 - 01 - 1938

மறைவு 18 - 07 - 2006

திருமதி

தெய்வானை வேலாயுதம் (திக்கம்)

திதி : அபரபக்க நவமி

எம் இனிய அம்மா,
சொல்லுந் தரமன்று
உன்றன் இழப்பு
உதிரத்தை உணவாக்கினாய்
அகிலத்தில் ஆளாக்கினாய்
கனவான வாழ்வுதனில்
கலையாத உணர்வானாய்
'எல்லாமாய்' அருகிருந்தாய்
என்றென்றும் அருகிருப்பாய்
சொல்லுந் தரமன்று
உன்றன் இழப்பு.

(63357)

'திருத்தணிகை'
கல்லூரி வீதி, வதிரி, கரவெட்டி.

-குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவில்
திருக்கார்த்திகைத் திருவிழாச் சிறப்பிதழ் 06.08.2007

பூர்வீக நிலையை எய்திவரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்; முருகனது திருவருளும் தொண்டர்களின் உழைப்புமே துணை

அரியதான மானுடப் பிறவியெடுத்து, அனுதினமும் அல்லல்களால் அலைக்களிக்கப்பட்டு, துன்ப துயரங்களால் வாட்டப்பட்டு, தாபங்களில் தத்தளிக்கும் மனிதர்களை இவற்றிலிருந்து நீக்கிவிடவே ஆலயங்களை அமைக்க சான்றோர் முன்வந்தனர். பிறவி, பிணி, மூப்பு, மரணம் இதுவேதான் சம்சாரச் சுழற்சி. இவற்றிலிருந்து விடுபட்டு, இடைநிலை வாழ்வுகளில் ஏற்படும் விபத்துகள், ஆபத்துகள், துன்ப துயரங்கள் என்பனவற்றை நீக்கி, சம்பத்தையும், சுகத்தையும் ஈந்து அதனால் இஷ்டசித்திகளையும் பெறவே ஆலய உற்சவங்களும் எழுந்தன. சுப்ரமண்யக்கடவுளது மகாத்மியம், மகத்துவம், கீர்த்தி என்பனவற்றை உணர்த்த விஸ்வாமித்ரரிஷி, முதன்முதலாக முருகப்பெருமானது அவதாரத்தை சரவணப் பொய்கையில் கண்டதும், ஓர் புத்துணர்ச்சி பெற்று, புதுவுலக வாழ் திறனையும் பெற்று, ஞானமும் முதிர்ச்சி கொண்டு, இப்பெருமானது தோற்றத்தாலும், தரிசனைகளாலும், அவருக்குவேண்டும் பூசைகள், கிரியைகள், உற்சவங்கள் ஆற்றி அதன் மூலம் மனிதனிடம் தொற்றும் தாத்பர்யங்கள் நீங்கி இப்பூமண்டல உலக வாழ்வில் இன்பமும் முத்தியும் கைகூட திருவருளும் கிட்டுமென்பதையும் விஸ்வாமித்ரரிஷி ஞானசக்தியால் உணர அந்த முருகதரிசனம் உதவிற்று. இவர்தான் பரப்பிரம்மம் என்றதனை உடனேயே விஸ்வாமித்ர் உணர்ந்து கொண்டார். இதனை யொற்றியே கச்சியப்ப சுவாமிகளும்

''அருவமும் உருவமாகி, அநாதியாய்ப் பலவாய் - ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய''

என உலகிற்கு அறியத்தந்தார்.

இந்த அவதார மகிமையை சப்தரிஷிகளும் அறிந்து மேன்மைகொண்டனர். இதனைத் தொடர்ந்து ஜீவராசிகளாலும் தத்தம் மார்க்கங்களில் உத்வேகங்களைக் கொண்டனர். பரமேஸ்வரனிடமிருந்து முதலாவது தோன்றியதே சுப்ரமண்யம்- இதனை ருத்ரமந்ரம் ''யாதேருத்ர சிவதனு'' என உச்சரிக்கிறது.

ஆறெழுத்துச் சுப்ரமணிய மந்திரத்தைக் கண்டு பிடித்து அம்மந்திரத்தின் ரிஷியாக சனத்குமாரர் விளங்கினார். முருகப்பெருமான் பிரம்மமேதான் என்றதனால் வேதமாதா எதுவும் அது பற்றிக் கூறாது ''சுப்ரமண்யோம்'' என மும்முறை கூறுவதோடு நிறுத்திவிட்டார். இப்பிரம்மம் உடலின் கண்ணும் உலகின் கண்ணுமுள்ள பகைமைகளை அடியோடு அழிக்கும் என்ற காரணத்தால் ருத்ரத்தில் ''நமோஹிரண்ய பாஹவே ஸேனான்யே'' எனும் மந்திரம் வேகம் பெற்றது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாகூட கீதையில் படைத்தலைவனாக கந்தனாகவே யான் பிரகாசிக்கிறேன் என்றார்.

பாரத இதிகாசத்தில் ஸ்கந்தனது பெருமைகள் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது. வியாசர் முருகனுக்கே அக்ரஸ்தானம் வழங்கியுள்ளார். பீஷ்மர் தமது படையை முன்னிலைப்படுத்திய போது,

''நமஸ்கிருத்ய குமாராய ஸேனான்யே சக்திபாணயே
அஹம் ஸேனாபதிஸ்தேக்ய பவிஷ்டயாமி நஸம்சயஹ''

என முருகப்பெருமானை வேண்டினின்றார்.

சிவபிரான் கூட உமாதேவிக்கு முருகனது அவதாரத்தை கூறும் போது

''ஆதலின் நமது சக்தி யறுமுகனும் யாமும்
பேதகமன்றாமம் போற் பிரிவிலன் யாண்டுநின்றான்
ஏதமில்குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்கருள வல்லான்''

என்றார்.

மகாஜனஸ்ரீ க.துரைஸ்ரீகதிர் குருக்கள்
மாவை ஆதீன கர்த்தர்,
பிரதம குரு.

குமரக்கடவுளது அவதாரத்தை அறிபவர்களும் அறிந்து உணர்வு கொள்வோரும் எம்பெருமானது திருவருட்செல்வங்களை பெற்றுய்வர். இதனால்தான் ஆறுமுகநாவலர் பெருமான் கூட சைவர்கள் ஒவ்வொருவரும் தனதில்லத்தில் ''கந்தபுராணத்தை'' வைத்துப்பூசிக்க வேண்டுமென இரந்து நின்றார். கந்தபுராண நூலை வீட்டில் வைத்துப் பூசிப்போருக்கு, நீண்ட ஆயுள், ஆரோக்கி யவாழ்வு, கிரகங்களால் ஏற்படும் தொல்லைகள், தான்யதனவிருத்தி, புத்ரலாபம் என்பன எதுவித சிரமமுன்றி கிடைக்குமென கச்சியப்ப சுவாமிகள் அறியத்தந்துள்ளார். கந்தபுராண நூலின் மீது பஞ்சாக்ஷர விபூதியைப் பட்டுப்பையில் வைத்து ''முருகா'' என மூன்றுதரம் ஓதி நித்யம் அணியின், மனச் சஞ்சலங்களின்றி இனிதே வாழலாமென கௌசிக முனிவரும் கண்டமுடிவு.

சோழ இளவாசி மாருதப்புரவிகவல்லி மாவிட்டபுரத்து சார்ஞ்சீவித் தன்மைகளையும், மந்ரகிருஷ்மாக இப்பிரதேசம் சகல வளங்களாலும் வளர்ச்சிபெறவேண்டுமென்ற வகையிலும், சர்வாபிஷ்ட சித்திகளைத் தரவல்ல பஞ்சபூத செயற்பாடுகளையும் உணர்ந்திருந்தாள். இங்கு தான் பெற்ற பேரானந்தத்தின் பேறாக இக்கோவிலை அமைத்தாள். பூமியும் வானமும் உள்ளவரை இக்கோவில் சிறப்புற்று, உலகஷேமங்களின் தகைமைகளுக்கு உயிர்த்துணை கொண்டிருக்க வேண்டுமென்றதற்காக சிதம்பரத்திலிருந்து வள்ளி தெய்வானை சமேத ஸ்கந்த பெருமானையும், கூடவே விக்கினேஸ்வரர், மஹாலக்ஷ்மி மூர்த்தங்களையும் இங்கு எடுப்பித்து பூசைகள் ஆராதனைகள், உற்சவங்கள் யாவும் இடையூறின்றி எக்காலமும் தொடரவேண்டுமென்பதற்காக தீக்ஷகர் பெரியமனத்துள்ளார், சின்னமனத்துள்ளார் எனும் அந்தண சிரேஷ்டர்களையும் இங்கு கொடியேற்றி, கோவில்காரியங்களை செவ்வனே முன்னெடுக்க ஒதுவார்கள், பூமாலைகட்டுவோர், மரஉலோக ஆசாரியர்கள், வெள்ளை அழகுபடுத்துவோர், மற்றும் பிற ஊழியஞ்செய்வோர் ஆகியோரையும் அந்நாளில் குடியேற்றி கும்பாபிஷேகத்தை நடாத்திவைத்தார். இன்றும் அக்கால சைவசமயக் குடிகள் தான் பரம்பரை பரம்பரையாக தத்தமது சேவைகளை நடாத்தி வருகின்றார்கள். இவர்கட்கெல்லாம் ரதோற்ஸவ விழாவின் போது ஆதீன மரியாதைகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. இதனால் தான் ஆலய சேவைகளும் புனிதங்கொள்கின்றன.

நாடுபிடிக்க இங்கு ஆக்கிரமிப்பாளராகநுழைந்த போர்த்துக்கேய டச்சு மிலேச்சர்கள் விதியின் வசத்தால், இக்கோவிலையும் இடித்துத் தள்ளி அதன் முன்னிலையில் ''சேர்ச்'' ஒன்றையும் நிறுவினார்கள். எமது நாடெங்கும் அப்போது மிலேச்சர்களது கொடுமையும் ஆயாதிவேலைகளும் அதிகரித்திருந்த வேளையிலும், இவ்வாலய பிரதேச கற்றாடலில் வாழ்ந்த ஆலய பக்தர்கள் தொண்டர்களது மௌன பூசை, மௌனஞ்சலி, மௌனவிரத அனுஷ்டானங்கள் என்பன பறங்கியர்களை தூரத்தியடிக்க உதவிற்று.

பின்னர் படிப்படியாக மாவிட்டபுரம் தன் பூர்வீக நிலையை எய்துகொண்டே வளருகிறது. அடிக்கடி இங்கு அரசியல் மாற்றங்களால் பற்பல வடிவில் தொல்லைகளும், ஆலயக் கட்டடங்களை அழிப்பதும் நடந்து கொண்டேயிருந்தாலும் ஆலயத்தொண்டர்கள் ''உச்சிமீது வானிடிந்து வீழ்ந்த போதிலும் அச்சம் அச்சமேயில்லை'' என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு ஆலயபுனர்நிர்மாணம், பூசை ஆராதனைகள், உற்சவங்கள் தடையில்லாது நிகழ ஆலயத் தொண்டர்கள் முன்னின்று கடுமையாக உழைப்பதும் மாவைக்கந்தனது திருவருட் துணையேயாகும். இவ்வகையில் சர்வஜித் வருட உற்சவங்கள் ஆடி 3 ஆம் நாள் (19.07.2007) ஆரம்பமாகி ஆடி 27 ஆம் நாள் (12.08.2007) ஆடி அமாவாசையோடு எழும்வாழ் சைவர்களது ஆற்றுப்படுத்தல்களோடு நடைபெற அருள்பெற்றது. ஆடித்திருநாள் திருக்கார்த்திகை விழா திங்கட்கிழமையான இன்று (06.08.2007) விஷேட வைபவமாக மாவையாலயத்தில் இடம்பெறுகிறது.

கந்தா! ஒளிமயமான காலத்தைத் தா!

அற்புதக் கந்தன் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் மாவிட்டபுரம் கந்தன் சந்நிதியில் வருடாந்த உற்சவம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. ஈழத்தின் புராதனமான முருகன் ஆலய மாக இது விளங்குகின்றது. கடந்த காலங்களில் ஆடியும் பாடியும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் அடி அழித்தும் காவடி எடுத்தும் வழிபட்டோர் தொகை எண்ணிலடங்காது.

யுத்த மேகங்கள் சூழ்ந்து இருப்பதனால் இவ்வாலயத்துக்கு வருகை தருவோர் தொகை அருகிக் காணப்படுகின்றது. என்றாலும் இன்றும் ஒழுங்காக அபிசேகங்கள், பூசைகள், விழாக்கள் செம்மையாக நடைபெறுவதை அனைவரும் அறிவார்கள். ஆதீன கர்த்தர் மகாராஜஸ்ரீ ஷண்முக நாதக் குருக்கள் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாகத் தலைமை வகித்து நெறிப்படுத்தும் ஆலயம் இதுவாகும். விழாக்காலங்களில் அந்தணச் சிரேஷ்டர்களும் அடியார்களும் குழுமி இருந்து ஆரோதிக்கும் காட்சி அற்புதமானது.

எமது மண் அமைதி அடைந்து ஆலயங்களில் எல்லாம் நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடை பெற்று வரக்கூடிய ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை எம்மக்களுக்கு மாவைக் கந்தன் ஏற்படுத்தித் தருவானாக.

வேல் உண்டு வினை இல்லை
மயில் உண்டு பயம் இல்லை

கலாநிதி. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

காலத்தின் அதிதேவன் கந்தப்பெருமானே!

உலகமே ஷண்முகப்பெருமானது அழிவற்ற காலஸ்வரூபி திருவுருவம் என்பதனை தத்துவ விளக்கமாக ஞானிகள் அறியத்தந்துள்ளனர். வருடங்களில் இடம்பெறும் ஆறு இருதுக்களும் ஷண்முகனது ஆறு திருவதனங்களென்றும்; பன்னிருகரங்களும் பன்னிருமாதங்களை உணர்த்துவதென்றும்; இரு திருவடிகளும் உத்தராயணம், தக்ஷிணாயனம் என்ற இரு அயனங்களையும், இச்சாசக்தி, கிரியாசக்திகளாக விளங்கும் வள்ளி தெய்வானை அம்மையார் இரவுபகலென்றும், மார்பில் பதிந்திருக்கும் உருத்திராஷங்கள் அறுபது வருஷங்களையும், செவிகள் பூர்வ அபரபக்ஷங்களென்றும் எனவே முருகப்பெருமானே காலத்தின் அதிதேவதை என்றும் ஞானிகளது கூற்று. இதனையே கச்சியப்பசுவாமிகளும் ''காலமாய் காலமின்றி'' என்ற பாவால் உணர்த்தியுள்ளார்.

ஆறுபிறைச் சந்திரன்களை ஒரே சமயத்தில் கூட்டி வைத்ததுபோல், முக்குறியுடன் கூடிய விபூதியுடன் இணைந்த திருமுக அழகோ பிரமாதம்; நெற்றிகளில் கஸ்தூரி கோரோசனை திலகங்களிட்டு அதனால் ஒளி வீசும் அற்புதமும் தனியருள் தரவல்லதாக அமைந்ததால் ஷண்முகருக்கு திலகசுவாமி எனவும் யாஞ்யவலகிய மஹர்ஷிதம் ஸ்மிருதியில்

''ஆதித்யஸ்ய ஸதாபூஜாம் திலகஸ்வாமி னஸ்ததா மஹா கணபதேஸ் சைவ குர்வன் ஸித்தி மவாணுயாத்'' என உண்டு. ஷண்முகாது காது குண்டலங்களிலிருந்தும்கூட திருவருட்பிரகாசம்ஒளிர்தருவதை ''பரிதிபலவுமெழுந்து சுடர் பாலித்தாற்போல் குலவு மகரக்குழையும்'' என்றார் குமரகுருபரர். ஷண்முகப் பெருமானது திருக்கைவேல் அன்னை துர்க்கையின் சமஷ்டியில் கோடிக் கணக்கான கணிதப்பெருக்கத்தின் சக்தியையும் கொண்டுள்ளது. மஹாபைரவரது சக்திகளையும் கொண்டுள்ளது. சுடல்நீரை வற்றச் செய்யும், மலைகளைப் பொசுக்கும், மகாசம்ஹாருத்ரன்போல் தொல்லைகளையும் தீராத வன்செயல்களையும் செய்வோரைச் சிதறடிக்கும். வேலாயுதத்தோடு இணைந்த ஷண்முகரை நேரிட் தரிசித்து செந்தமிழ்பாவால் துதிசெய்து, தம்மையே அவர்தம் பாதங்களில் அர்ப்பணிப்போரது இரட்ஷகனாக இப்பெருமான் விளங்கி, அவரவர் இஷ்டகாம்யங்களை நிறைவுசெய்யும் மூர்த்திதான் இம்மூர்த்தி. இந்த வேல்கூட யாத்திரைகள் செய்து வேண்டிய வரசித்திகளைப் பூர்த்திசெய்துவிட்டு, கங்கையில் நீராடி திரும்பவும் முருகனது கையில் வந்த மருமம் இதனை

சண்முக மூர்த்தியின் கையில் துலங்கும் சக்திவேல்

''மீண்டிடு சிற்றவைவேல், வெற்பினுள் துஞ்சுகின்ற ஆண்டகை வீரர்தம் ஆயிடை எழப்பி வான்போய் மாண்தகு கங்கைதோய்ந்து வாலிபவடிவாய், ஐயன் தூண்டிய காத்தில் வந்து தொன்மைபோல் இருந்ததம்மா. இத்தகைய சக்திவேல் வஜ்ரயுத் சங்கார சத்திவேல்'என்ற ரூபத்தில் மாவை ஷண்முக மூர்த்தியின் கையில் எந்நேரமும் துலங்கியிருக்கிறது. மாவைக்கந்தனாலயத்தை பொசுக்கிய சூரரைக் கூட இக்கைவேல் தெல்லிப்பழை துர்க்கையம்மாள் ஆலயத்தில் வைத்து பூசித்தகாலை பக்தர்களது வேண்டுதல்களின் பேரால் அச்சூரர்களை சிதறடித்து உருக்குவைத்து ஆவியையும் போக்கடித்தது. மாயாஸ்திரங்களைக்கூட இவ்வேல் அழித்துவிடும். கந்தபுராணம், மகா பாரதம், இராமாயணயுத்த காவங்களில் இவ்வேல் ஆற்றிய வெற்றிகள் அளவிடமுடியாது. இதனை உணர்ந்து மகரிஷிகள்கூட,

''தனிவேற்பெருமானே, நீ அளவற்றபொளி பெற்றிருப்பதாலும், ஆறு முகம் கொண்டிருப்பதாலும், எங்களது இறைவனான முருகப் பெருமானிடமிருந்து வந்ததாலும், சக்தி எனும் பெயரைத் தரும் துதிகள் பெற்றிருப்பதாலும், நீரே கந்தசுவாமியாராகக் காட்சி தருகிறீர்'' என்றெல்லாம் துதி செய்தனர். இத்தகைய ஷண்முகப்பெருமானின் அற்புதங்கள் மாவை ஷண்முகப் பெருமானும் நடாத்தி வருவதை பக்தர்கள் நன்கறிவர். மாவைக்கந்தனது விழாக்கள் ஆடி 27ஆம் நாள் (12.08.2007) ஆடி அமாவாசை தீர்த்த விழாவோடு பூரணமாகும்.

பக்திபரவசங்களோடு உயரிய தெய்வீகத்தோடு இடம்பெறும் ஆடித் திருக்கார்த்திகை விழா இன்று (06.08.2007) திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இ.போன்பநாயகம்,
ஏழாலை.

ஆடிவரும் தோகை மயில் அடங்கி ஒடுங்கும் அசுர மயில்

பாரதத்திலே ஸ்கந்த பெருமானுக்கு மகாவிஷ்ணு மயிலை அன்பளிப்பாகக் கொடுத்ததாக ஒரு நூற்றுண்டு. கருடனில் நடந்த மயிலையும் சேவலையும் சிருஷ்டித்ததாக பிரமாண்ட புராணம் முதல் அறியப்படுகின்றது. மயிலுக்கோகையரிகை அலங்காரமாக மகாவிஷ்ணு அணிவுண்டு. மயிலின் நடை, அழகு, கம்பீரம் எல்லாவற்றையும் பார்ப்பது கண் நன்மை அளையும். அதனாலிதாதா மயிலின் பார்வையால் மரணபயம் அகலுமென்று பாடியுள்ளார்.

''மரணம்மாகாமல் எங்கிக்கலையாம் என்றும் வாழ்த்தநுனை
திரனக் கலாபமும் வெகுமுண்டு''

சிவனையும் மயிலையும் நினைத்தால் ஒன்றாகக் கலி உலகம் மலிந்திருக்கிறது. மயிலைக்காரத்தில் இச்சொற்பதி அழகாக அமைக்கிறது. மகமான் தந்த மயிலான தேவசேனையையும் வள்ளியான் தந்த வள்ளியம்மனையும் மணம்புரிந்து திருத்தணிகையில் விற்றிருந்து அருள் காக்கும் முருகனது மயிலை நினைத்துக் கொள் எதுவித குறையுமிராது.

முருகப்பெருமானுக்கு மயிலை ஆட்டுக்கடா வாகனங்களுமுண்டு. மயில், கோகையை விரித்து ஓங்கி எழும் பிரணவ வடிவத்தைக் காட்டி நடனமாடுகிறது. இது விரித்து மகுடத்தைக் கண்டு மயில் மகிழ்ந்தாடும். இது இருள், சேவல் சூரியனைக் கண்டு மகிழும். இது ஒளி. மயில் நிறம் பச்சைநிறம். சேவுந்து நீல நிறம். சுவாமிக்கும் நீலகண்டன் என்பர்.

சிவபெருமானது நீலகண்டம் விஷத்தை அடக்கியது போலவுமயிலை நினைப்போருக்கும் விஷபயம் நீங்கப் பெறும்.

மயிலின் தோகை, வளைந்த கழுத்து, நுண்ணிய கால், வளர்ந்த கால், இவை பிரணவ வடிவான ராயலேயாம். மயிலுக்கு ஆலயங்களிலும் நந்தியின் ஸ்தானத்தில் இடமுண்டு. பிரதிஷை செய்து பூசைகளும் அற்றப்படுகிறது. காயத்திரியுமுண்டு.

''நகிகா பாலகாய வித்மஹே மயூராய தீமஹி
தன்னோ மயூரம் பிரசோதயாத் (தயாநந்ரம்)
நீலகண்டாய வித்மஹே சித்ரபக்ஷாய தீமஹி
தன்னோ மயூரம் பிரசோதயாத்'' (பத்ததிகள்)

இவ்வாறான காயத்ரி மந்திரங்களும் மயிலுக்குண்டு.

மயிலின் இவ்வணங்களை ஆலயங்கள் கூறுமிடத்து

''சித்தவர்னம் சாரிகனம் சந்துபு புஜங்கம
மஹாபலம் மஹாகாயம் மயூரம் பிரணமாம்யஹம்''

என்று பல சித்திர வர்ணங்கள் கொண்டதும், அலகுகொண்டதும் பாம்புடையதாகவும், பலம் நிறைந்ததாயும், மகுடங்கொண்டதாயும் அசுரர்களை அழிக்கும் திறனுள்ளதாயும் மயில்வாகனங்கள் அமையவேண்டும். நல்லவர்களையும் தீயவர்களையும் மயில் அறிந்து கொள்ளும் சக்தியையும் கொண்டுள்ளது.

கார்த்திகைத் திருநாளன்று காங்கேசன் மக்கள் கந்தனுக்கு மயில்வாகனம் உபயம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது கார்த்திகைத் திருவிழாவை காங்கேசன்துறை மக்களே உபயமாகச் செய்து வருகின்றனர். ஏழாம் நூற்றாண்டில் இருந்து இந்த உபயம் தொடர்கின்றது. கந்தனின் தாள் மறவாது காங்கேசன்துறை அடியார்கள் கார்த்திகைத் திருவிழா நடைபெறும் இன்று ஒங்கார மயில் வாகனத்தை மாவைக் கந்தனுக்கு உபயம் செய்கின்றார்கள்.

நன்னிலை நல்கும் ஆடித் திருக்கார்த்திகை

தேவர்களது இடுக்கணைக் களைய சிவபிரான் தனது நேற்றிக்கண்ணாடாக ஆறு தீப்பொறிகளை எய்ய, அத்தீப்பொறிகளை அக்னியும், வாயுவும் மந்தாகினி கங்கை மூலம் சரவணப்பொய்கையில் சேர்க்கவும், சரவணப் பொய்கையில் மந்தாகினி தந்த வைந்தா ஆறு தீப்பிழம்புகளாகத் தோன்றினர். இவர்கள் நாமினி, காரி, தமினா, பிரமினா, ஆரியா, பலாகா, வைஷ்ணா எனும் நாமம் கொண்ட கார்த்திகை மாதர்கள் மாதாவிடி ஆதரித்தனர். கார்த்திகை மாதர்களால் மாதாவிடி தாலாவிடி வளர்க்கப்பெற்றதனால் ''கார்த்திகேயன்'' எனும் நாமத்தை இக்கோமள திருமேனிகள் பெற்றனர். உமாதேவிக்கு பாலகனின் இக்கோலம் பிள்ளைக்கு நாமகரணம் சூட்டியபின் கூறுகையில்

''சகலகலா தரு கண்ணி செயதிரு குமரன் தங்கை
நாமகரன் கொண்டுநின்று ராவணாதி தீரநாளை
காங்கேயன் எனப்பேர் பெற்றான் காதரிந்த ராவணனதிக்
பாங்கரிய வருதலாலே **சரவணபவ** னென்றானான்
தாமெனவாரால் போற்று தங்கொள் பாலகத்தாலே
சாமந்தர் **கார்த்திகேயன்** என்றொரு கொம்பர் பெற்றாள்
சேமங்கள் வழங்காநாத் தாமாகி யொன்றாகி செம்தாள்
ஆமருளாலே **கந்தனாகிலுந்** தாமம் பெற்றான்''

இவ்வாறாகான் முருகன் அருமைபெருக்க நாமகரணம் செய்யப்பட்டது. இதிக் காத்திகேயன் நாமங்கள் பிரத்தியேகமாகவே சிவனது வாக்குமூலம். இரிவுமிக்க வாழும் மைலைக்கள் தாமுமிள்ளைகட் குநாமகரணம் செய்யும் போது இதனைக்கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாதந்தோறும் நிகழும் கார்த்திகை நட்சத்திரம் கூடிய தினங்களும் குறிப்பாக ஆடிக்கார்த்திகை, கார்த்திகைத் திருக்கார்த்திகை தினங்களிலும் முருகப்பெருமான் பிரசன்னமாகத் தீப்பொறிவடிவாகி தீபதரிசனம் செய்வோருக்குத் திருவருள் கிடைக்கும் என்றார் நாரதமுனிவர் தேவர்களுக்கு விளக்கியுள்ளார். திருவருட் செல்வங்களைப் பெற்றுய்ய முருகப்பெருமானது கார்த்திகைத் தினங்கள் நான்மிகவும் முக்கியமானதாகும்.

தெய்வீகக்கிரியும், கற்பூரதீபமேற்றியும் பூசைகளின் போது காணும் தரிசனங்களாலும் முருகனது திருக்கோலத்தைப் பார்க்க முடியும். மந்திரயோதி மானிடக்கேற்றி அந்தத்தீப ஒளியிலும் முருகனது காட்சியைக் காண இயலும். வள்ளிநாயகி மானிடக்கேற்றி அந்தீப ஒளியிலும் முருகனது காட்சியைக் காண இயலும். வள்ளிநாயகி மானிடக்கேற்றி அந்தீப ஒளியில் முருகனைக்கண்டு, அம்மானிடக்கை முருகனுக்கே சமர்பித்து வள்ளி முருகனோடு இணைந்தகலந்த செய்திகள் ஏராளமுண்டு.

கார்த்திகை நாட்களில் ஏற்றும் தீபங்கள் ஞானதீபம், தியோதி, பரஞ்சுடர் என்றெல்லாம் விந்தந்து கூறப்படும். தீபதரிசனையால், இறறினைத் தரிந்து ஆனந்தக் கண்களை புனிதகண்களென சங்கபிரவர் பாம்கையுடன் அறிவித்தந்துள்ளனர்.

கார்த்திகை தினங்களில் தவறாமல் வழிபடுவோர்

மாவைக் கந்தனாலயத்தில் இடம் பெறும் ஆடிக் கார்த்திகை விழாவில் ஆறுமுகம் பாருக்கோத்து ஏண்முகார்ச்சனை ஏவல் தெய்வீக மந்திரங்களை வழங்கி, அமரர்கள் செல்வம் இன்னருள் கிடைக்க கூறிய வழிவகைகள் மாவையாதீன சிவாசாரியார்கள் வழிபட்டுநிற்பார்கள். இவர்கள் அனைத்தும் சாத்திரியமும் ஒழுங்கு நன்னிலை கொண்டு நலமும் இன்புற்று வாழ வேண்டுமென மக்களை கூட பிரார்த்திப்பார்கள். இவற்றினால் ஆடிக் கிருத்திகை விழா நேர்மையாகிறது.

இ.வேதநாயகி, மாவிட்டபுரம்.

மாவை முருகன் புகழ்பாடுவோம்

மாவை முருகன் புகழ்பாடுவோம்
மாமுகம் நீக்கிய திறம்பாடுவோம்
தோகை மயிலோன் அருளோங்கும்
துயர்கெ வடிவேல் துணையாகும்

கலியை அறுக்கும் வழிதேடில்
கலியுக வரதன் எனப்பாடும்
கிலிகெட வடிவேல் துணையாகும்
கீர்த்தி மிகுந்து நலமோங்கும்

கந்தன் கருணை விழிகாணில்
கலியும் அகன்று வலியோங்கும்
சிந்தா குலங்கள் நீக்கியருள்
சிவனருட் செல்வன் புகழ்பாடும்

எங்கும் கடரும் எழில்தீபம்
எந்தை முருகன் புகழ்பாடும்
பொங்கும் துயரம் விரைந்தோடும்
புகழ்மிகு கார்த்திகை ஒளிதோன்றும்

எந்தை ஈசன் குருநாதன்
எழில்மயில் வாகனன் புகழ்பாடும்
கந்தன் கருணை விழிபாடும்
கார்த்திகைக் குமரனின் புகழ்பாடும்

பாடும் கந்தன் திருப்புகழை
பாடி மகிழ்ந்திட வினையோடும்
கேடும் மறைந்து நலமோங்கும்
கேசவன் மருகன் புகழ்பாடும்.

கலையரசு க.சுகதேவன்,
கொல்லங்கலட்டி.

கார்த்திகைத் திருநாளில் மாவைக் கந்தன் எழில் கண்டால் வந்தவினை ஓடிவிடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA

Tender for Supply of Uniform Materials

Sealed Tenders are invited from Reputed Suppliers for the following items.

Serial No.	Item	Qty.
1.	White Polyester Shirting 80 /20, 36" 1.82 m - 24 Nos. = 43.68 0.91m - 15 Nos. = 13.65 2.25m - 466 Nos. = 1048.50 1105.83	1105.83 m
2.	Black Skysuplin / Black Polyester Suiting 58"160" I.2m - 481 Nos. = 577.20	577.20 m
3.	Light Blue Polyester Shirting 36" 2.25 m - 168 Nos. = 378.00 3.65 m - 1 No. = 381.65	381.65 m
4.	Grey Skysuplin / Grey Polyester Suiting 58"/60" 9.6 m - 51 Nos. = 489.60	489.60 m
5.	Dark Blue Skysuplin / Dark Blue Polyester Suiting 58"/60" 1.2 m - 153 Nos. = 183.60 6.17 m - 3 No = 18.51 202.11	202.11 m
6.	White Skysuplin / White Polyester Suiting 58"/60" 2.29 m - 180 Nos. = 412.20 0.45 m - 03 No. = 1.35 413.55	413.55 m
7.	White Cotton Saree / Polyester Saree 5.4 m each	15 Nos.
8.	Socks - Black / Brown (Cotton / Nylon)	102 Pairs

All Tenderers are requested to pay a non -refundable Tender fee of Rs. 1500.00 and refundable deposit of Rs. 5,000.00 by Money Order drawn infavour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Office or in Cash at the Shroff Counter of the University of Jaffna. The Money Order / Cash Receipt to be attached to the Tenders. The University may at its discretion either increase or decrease the quantity of items to be purchased. If any special discount is allowed to the University, that should be indicated in the Tender. The successful supplier should be prepared to deliver these items at the University of Jaffna and to extend one month credit facility. After confirmation of the order supply should be completed within three weeks time.

Tenders should be sent under registered cover, along with the sample of each variety in 6" x 6" size to the Bursar, University of Jaffna, Thirunelvely Jaffna. Top left hand corner of the envelope to be marked "Tender for Uniform Material" with No.: **UJ/F/SK/T/02/07.** Tenders should be sent on or before 24-08-2007 at 02:00 pm.. Tenders will be opened on same day at 02:30 pm. (TP-No.021-2222644)

Vice Chancellor University of Jaffna. (C/53160)

East West College Bangalore

ISO 9001 - 2000 Certified

AFFILIATED TO BANGALORE UNIVERSITY, VTU, RGUHS

- Ultra modern & beautifully land scaped campus in 20 acres land
- Spacious classrooms and fully equipped computer lab with internet facilities
- Separate hostels for boys and girls with indoor outdoor gams, multi gym, etc.
- More than 75 companies visited last year for campus recruitment.

COURSES OFFERED AT EAST WEST

Medical:
BDS - Dental Science

Engineering:
Bachelor of Engineering,
Electronics & Communication,
Mechanical Engineering,
Computer Science, Information Technology,

Para Medical:
Bachelor of Pharmacy
B. Sc – Nursing
Diploma in Medical Lab Technician
Diploma in Pharmacy

Professional Degrees:
Bachelor of Computer Applications - BCA
Bachelor of Business Management - BBM

General Degrees:
Bachelor of Sciences
Microbiology / Genetics / Bio-Chemistry / Bio-Technology

East West Admission Center:

Colombo Office
#23, 42nd Lane, Colombo - 06.
Tel: 011-564 0787. 077-379 5707.

Jaffna Branch Office
51, Amman Road, Nallur, Jaffna.
021-222 2364 077-308 7795

கண்ணீரில் நெஞ்சுருகும் ஈராண்டு நினைவுகளில்.....

திருமதி
ரோகினி செல்வராஜா (விஜயா)

திதி: அட்டமி 06.08.2007

மனம் மகிழ
14.04.1967

மனம் நெகிழ
27.07.2005

(63167)

நேசம் கொண்ட உறவு எல்லாம்
நெகிழ்ந்து உருகி நிற்க
நேற்று நடந்தது போல் நெஞ்சமெல்லாம்
வலியெடுக்க கலங்கி நிற்கின்றோம்.

'செல்வாபுரம்'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

உங்கள் நினைவுகளில்:
கணவர், பிள்ளைகள், அப்பா,
அம்மா, சகோதரன், சகோதரிகள்.

கண்ணீர் அஞ்சலி



லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளரும் கல்லூரியின் அதிபருமாகிய வைத்திய கலாநிதி

A.V. இராஜரட்ணம் (A.V.R)

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

D.A.M. பட்டதாரிகள்,
(63352) சித்த மருத்துவப்பகுதி, யாழ்.மாநகரசபை.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

904 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம்

01 10 28 37

03-08-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5085564 - 5100645

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	330,799	10/-	3,307,990/-
2 இலக்கங்கள்	30,348	20/-	606,960/-
1 இல. + லக்கினம்	30,016	30/-	900,480/-
2 இல. + லக்கினம்	2,772	100/-	277,200/-
3 இலக்கங்கள்	814	500/-	407,000/-
3 இல. + லக்கினம்	78	5,000/-	390,000/-
4 இலக்கங்கள்	4	100,000/-	400,000/-
4 இல. + லக்கினம்	-	1,000,000/-	-
மொத்தம்			6,289,630/-
முச்சக்கர வண்டிகளின் பெறுமதி	5	204,700/-	1,023,500/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	394,836		7,313,130/-

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,738,650/-

தொடர் இல.42112984 கூத்து மேற்பட்ட நல்ல நிர டிக்கட்டுக்கள் 2007 ஆகஸ்ட 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

மொனராகலை	5094294-2-93
புத்தளம்	5096082-8-91
ஹம்பாந்தோட்டை	5086736-2-07
மாத்தளை	5099334-6-90
மட்டக்களப்பு	5093645-5-83

Group Classes

English medium - Science
By: **P.Ragumar**
Grade 8,9,10
Contact - 2223598 (63377)

ஓராண்டு நினைந்துருகல்

அமரர் கணபதிப்பிள்ளை தருமலிங்கம்

தோற்றம்	மறைவு
15.10.1910	29.04.2006

அமரர் தருமலிங்கம் பார்வதிப்பிள்ளை

தோற்றம்	மறைவு
04.06.1921	16.08.2006

திதி - அபரபக்க அட்டமி

அன்பு சொரிந்து
அறிவென்னும் அமுதூட்டி
இன்பமுடன் நாம்வாழ
எந்நாளும் உழைத்தீர்கள்!

துன்ப இருளகற்றச்
சுடராக இருந்தீர்கள்
வந்த பணிமுடித்து
வானாடு சென்றாலும்
எங்கள் வாழ்வுக்கு
ஏணியாய் இருந்திடுவீர்.
பத்தாவுக் கேற்ற
பதிவிரதை யாயிருந்து
முத்தான வாழ்வுக்கு
முதுகெலும்பாய் இருந்தீர்கள்!

ஆயிரம் பிறைகண்டீர்
அன்பாலே அரவணைத்தீர்
தாய்நாக பூசணியின்
தாளினைக்கீழ் இருந்திடுவீர்!.

எமது குடும்பத் தலைவர்களின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூசனி அம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பகம்,
மேலவீதி, நயினாதீவு.

(63198) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

சர்வதேசக் கருத்து நிலைப்பாடு கொழும்புக்கு எதிராகத் திரும்புகிறது

இராணுவ நடவடிக்கைப் போக்கில் - யுத்த முனைப்பில் - தீவிரமாக இருக்கும் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச அழுத்தம் கழுத்தை நெரிக்கும் சுருக்குக் கயிறாக இறுகி வருவதை அறிய முடிகின்றது. வரும் வாரங்களிலும் மாதங்களிலும் அது இன்னும் தீவிரமடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால் அந்தப் புறநிலை யதார்த்தத்தை இலங்கை அரசுத் தலைமை புரிந்து கொண்டிருப்பதாக - உணர்ந்துகொண்டிருப்பதாக - தெரியவில்லை.

இலங்கையில் சீர்குலைந்துபோயுள்ள மனித உரிமைகள் விவகாரத்தை அடிப்படையாகச் சுட்டிக்காட்டி, இலங்கைக்கான அனைத்து இராணுவ உதவிகளையும் முடக்குவது குறித்து அமெரிக்க செனட்சபை ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டில் வெளி நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கும் இராணுவ உதவிகள் தொடர்பான உத்தேச சட்ட முன்வரைவின் கீழ் இலங்கைக்கான இராணுவ உதவிகளை முடக்கும் பிரேரணையை முன்வைப்பதற்கு அமெரிக்க செனட்சபை தீர்மானித்திருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

மனித உரிமைகளை மிக மோசமாக மீறி, தனது படைகள் மூலம் அதிகாரங்களை கொடூரமாகத் துஷ்பிரயோகம் செய்துவரும் கொழும்பு நிர்வாகத்தின் போக்கு, சர்வதேசத்தின் மிக ஊன்றிய கவனிப்புக்கும் அதன் மூலம் அதிருப்திக்கும் உள்ளாகியிருக்கின்றது.

இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யும் - மனிதநேய விடயங்கள் மற்றும் நிவாரண ஒருங்கிணைப்புப் பணிகளுக்கான - ஐ.நாவின் கீழ் நிலைச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் இலங்கையில் மனித நேய நிலைமைகள் குறித்தும் இவ்விவகாரங்களில் அரசின் பங்கு பணி குறித்தும் நேரடியாக ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் ஒக்டோபரிலும் -

சித்திரவதைகள் சம்பந்தமான ஐ. நாவின் விசேட தொடர்பாளர் மான்பிரட் நொவக் நவம்பரிலும் -

உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகள் சம்பந்தமான ஐ. நா.செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி வோல்டர் கலின் டிசம்பரிலும் -

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இதேசமயம், இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி அதற்காக இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்பாக ஐரோப்பிய ஒன்றியம் வைத்திருக்கும் நகல் பிரேரணை மீண்டும் அடுத்தமாதம் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத் தொடரில் பரிசீலனைக்கு எடுக்கப்படவிருக்கின்றது.

இதற்கிடையில் வழமையாக மனித உரிமை மீறல்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளை மோசமாக விமர்சித்து வரும் 'மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள்' என்ற அமைப்பு இப்போது அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை காரமான வார்த்தைகளால் கண்டித்திருக்கின்றது. ''புலிகளின் பயங்கரவாதத்துடன் யுத்தம் புரிகின்ற பெயரில் தமிழினத்தையே அரசு அழித்து வருகின்றது'' - என்ற சாரப்பட அது அரசுத் தரப்பைக் கடுமையாகச் சாடியிருக்கின்றது.

இதையே, 'புலிப்பயங்கரவாதத்தை அரசு பயங்கரவாதத்தால் எதிர்கொண்டு அழித்தல்' என்ற தந்திரோபாயத் திட்டமாக அரசு தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கின்றது என்று இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளோம்.

இனவெறியும், பேரினவாத அதிகாரத் திமிரும், மேலாதிக்க மமதையும் கண்ணை மறைப்பதால் இலங்கை அரசுத் தலைமைக்கு நீதியும் நியாயமும் புரியவில்லை. தனது படைத்தரப்பின் அட்டூழியங்கள் பெரிய விடயமாக மனதில் படவில்லை. இந்தப் போக்கினால் சர்வதேச எதிர்ப்புணர்வு திரண்டுவருவதை அதனால் உணர முடியவில்லை.

யதார்த்தம் - மெய்மை நிலை - சர்வதேசத்தின் மனப்பாங்கு - கொழும்புக்குத் தெரியவேயில்லை.

இலங்கைத் தீவில் சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்குவதற்காகக் கொடூர யுத்தத்தை ஏவி விட்டிருக்கும் கொழும்பின் எதேச்சாதிகாரப் போக்குக்கு எதிராக சர்வதேச சமூகத்தின் மத்தியில் திரண்டுவரும் கடும் எதிர்ப்பு அலைகளை வெளிப்படுத்தும் ஒரு 'ஸாம்பிளாக' - உதாரணமாக - இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பகிரங்க அறிக்கை அமையும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உரிமைகளுக்காகப் போராடும் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் எண்ணம் மஹிந்தரின் அரசுக்கு அடியோடு இல்லை என்பதையும் -

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதை விடுத்து யுத்தத் தீவிரத்தோடு தமிழர்களை அடக்கி, நிரந்தரமாக அடிமைப்படுத்தி, தேசிய ஒடுக்குமுறையை அவர்கள் மீது முழு அளவில் கட்டவிழ்த்து விடுவதே மஹிந்தரின் அரசின் இனவாதத்திட்டம் என்பதையும் -

சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொண்டுள்ளது. இந்தப் பேரினவாதத் திமிர்த்தனத்துக்கு எதிரான சர்வதேச அழுத்தங்கள் இனிமேல் மெல்ல மெல்லக் கட்டவிழ்ந்து கொழும்புக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் என நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கலாம்.

சரணடைந்து சிறைச்சாலையில் தங்கியுள்ளோருக்கு உறவினர்கள் உணவு எடுத்துச் சென்று வழங்கலாம்

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 6

சரணடைந்து சிறைச்சாலையில் தங்கியிருப்போரின் குடும்பத்தினர் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் சிறைச்சாலைக்குச் சென்று உணவு வழங்க சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளதாக ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்தவர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள் நேற்று முன்தினம் யாழ்.சிறைச்சாலை சென்று பார்வையிட்டனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக 41 ஆண்களும் பெண் ஒருவரும் மனித உரிமை ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் கடந்த இரு வாரங்களில் சரணடைந்துள்ளனர். இவர்கள் யாழ்.நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலையில் நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.சிவராஜசிங்கமும் சட்ட ஆலோசகர் எம்.றெமேடியஸஸும் சரணடைந்தவர்களின் நிலை குறித்து விசாரித்து அறிந்தனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்ததுடன் ஒவ்வொருவரின் விவரங்களையும் பதிவு செய்தனர்.

இதேவேளை-

சிறைச்சாலையில் தங்கியுள்ளவர்கள் தமக்கு வெளியில் பாதுகாப்பு இல்லை என்றும் அதனால் அங்கிருந்து செல்ல விரும்ப வில்லை என்றும் ஆணைக்குழுவினரிடம் தெரிவித்தனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை பிரதி சனிக்கிழமைகளில் டாக்டர் ஒருவர் பரிசோதித்து வருகிறார் என சிறைச்சாலை அதிகாரிகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தனர்.

(அ-1)

கீரிமலை, வெள்ளைக் கடற்கரைக்குச் செல்ல வசதி செய்வதாக அமைச்சர் தெரிவிப்பு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12ஆம் திகதி) ஆடி அமாவாசைத் தினத்தன்று கீரிமலை மற்றும் மணம்கும்பான் வெள்ளைக் கடற்கரை ஆகிய புனித தீர்த்தங்களில் இந்துக்கள் தமது பிதிர்ச் கடமைகளை நிறைவேற்றக் கூடியதாக அந்தப் பகுதிகளுக்கு செல்வதற்கு உரிய ஒழுங்குகளை தாம் மேற்கொள்ள உள்ளதாக சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கீரிமலை, வெள்ளைக் கடற்கரை புனித தீர்த்தங்கள் பாதுகாப்புப் பகுதிகளாக உள்ளதால் குறிப்பிட்ட இடங்களுக்கு செல்வதற்கு பாதுகாப்புத் தரப்பின் அனுமதி தேவை. அதனால் மக்கள் அங்கு செல்லமுடியாதிருப்பதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது. அப்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-111)

தீவக சோதனை நிலையங்களை 6 மணிக்கு திறக்க நடவடிக்கை

நல்லூர், ஓக. 6

தீவுப் பகுதியில் இருந்து யாழ்.நகருக்கு வருவதற்கான வழித் தடத்திலுள்ள அல்லைப்பிட்டி, பண்ணை சோதனை நிலையங்களை காலை 6 மணிக்குத் திறக்க உரிய அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

மேற்படி சோதனை நிலையங்கள் காலையில் 7 மணிக்கு திறக்கப்படுவதால் தீவுப் பகுதியில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் இப்போது சோதனைகளை முடித்து ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் இதனால் நோயாளர்கள் மீண்டும் தத்தமது இடங்களுக்கு திரும்பிச் செல்வதில் சிரமங்கள் இருப்பதாகவும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு காலை 6 மணிக்கு குறிப்பிட்ட சோதனைச் சாவடிகளை திறக்க ஒழுங்குகள் செய்வதாக நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (அ-111)

படகுகளில் மன்னார் திரும்பிய அகதிகள் கைதாகி விடுவிப்பு

மன்னார், ஓக.06

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றபின்னர் அங்கிருந்து படகுகளில் நேற்று முன்தினம் தலைமன்னாருக்கு மீண்ட 19 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் பின்னர் தத்தமது இடங்களுக்குச் செல்லஅனுமதிக்கப்பட்டனர்.

ஏழு குடும்பங்களைச் சேர்ந்த இந்த 19 பேரையும் கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் மன்னார் பொலிஸாரிடம் அவர்களைக் கையளித்தனர்.

மன்னார் பொலிஸார் அவர்களை விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் மன்னார் நகரப்பிரதேச செயலாளர் நந்தினி ஸ்ரான்லி டி மெல்லின் பொறுப்பில் விடுவித்தனர்.

இவ்வாறு வந்த அகதிகளில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த பன்னிருவர் திருமலையைச் சேர்ந்தவர்கள். எஞ்சியோர் யாழ். மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மன்னார், யாழ். மாவட்டங்களைச் சேர்ந்தோர் மன்னாரில் தங்கள் உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் இன்று தமது சொந்த இடத்துக்கு - திருகோணமலைக்கு - அனுப்பி வைக்கப்படவிருக்கின்றனர். (சி)

நாளை

ஆடி - 22	செவ்வாய்க்கிழமை 07.08.2007
திதி : நவமி	பி.பகல் : 01.19
நட்சத்திரம் :	கார்த்திகை மாலை : 04.30
சூரியோதயம்	06.14
சூரியாஸ்தமனம்	06.34

வெளிநாட்டில் வசித்தாலும் இலங்கையர் ஆயுதம் கொள்முதல் செய்யத் தடை!

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் கடந்த வாரம் திங்கட்கிழமை மேலும் புதிய விதிகள் சிலவற்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

அபாயகரமாண ஆயுதங்களை சேகரித்து வைப்பதை தடுப்பதற்கான சட்ட விதிகள் ஏற்கனவே சட்டப் புத்தகத்தில் இருந்து வருகின்ற போதிலும் இப்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விதிகள், இராணுவ ஆயுதத் தளபாடங்களை இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமன்றி வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் வாங்கிக் குவிப்பதை தடைசெய்கின்றது.

இலங்கையர் ஒருவர் உள்நாட்டில் வசித்தாலும் அல்லது வெளிநாட்டில் இருந்தாலும் இராணுவ ஆயுதங்களை வாங்கிக் குவிக்கவோ அல்லது வாக்குவதற்கு உதவி செய்யவோ அல்லது அதற்காக நிதிஉதவி செய்யவோ முடியாது. அவ்வாறான செயல் ஒரு குற்றமாகக் கருதப்படும்.

அக்குற்றத்தை புரியும் எவரும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படலாம். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும்வரை அவர் காவலில் வைக்கப்பட்டிருப்பார்.

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் ஆயுதங்களை கொள்முதல் செய்வதாக கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே இந்த விதிகள் கொண்டுவரப்படுவதாக கருதப்படுகிறது.

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்ய உதவுவதாக செய்திகள் வந்துள்ளன.

அத்தகையோர் திரும்பும் போது அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு புதிய விதிகள் உதவியாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.

சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்

சங்காரை சண்முகரத்தினம்

கடகம்

கடகம்: (புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு)

இதுவரை காலமும் ஏழரைச் சனி பகவானுடைய நடுக்கூறாக பலன் தந்த சனி பகவான், 05.08.2007 இலிருந்து சிங்கராசியில் ஏழரை கடைக் கூறாக நின்று பலன்தரவுள்ளார். இக் காலம் 05.08.2007 இலிருந்து அடுத்து 21/2 வருடங்கள் குடும்பம் என்று சொல்லக்கூடிய 2ஆம் இடத்தில் கேதுவுடன் கூடி இருப்பது உங்களுக்கு குடும்பநிலையில் சதா பிரச்சினைகளைத் தரும். திருமணவயதிற்குரியவர்களுக்குத் திருமணம் கைகூடுவது இழுபறி, காலதாமதம் தருவதுடன் முடிவெடிக்கமுடியாத பலனையும் கைகூடாத நிலையையும் தரலாம். மாங்கல்ய ஸ்தானத்திற்குரிய சனி பகவான் குடும்பத்தில் ஞானகாரகன் கேதுவுடன் இருப்பதால் எதிர்வரும் 10.04.2008 வரை திருமண சுகமிராது.

மேலம் இந்த ராசிக்காரர்களுக்கு காது, தொண்டை சம்பந்தப்பட்ட சுகயீனங்களும் சிகிச்சையும் ஏற்படும். பல்லுடன் சம்பந்தப்பட்ட ஆயுதம் பாவித்த சிகிச்சையாகவும் பலன் வரலாம். மேலும் 15.11.2007 இன் மேல் குருமாற்றம் பணவரவு குடும்பச்சிறப்பு, புத்திரரால் சுகம் என்பன தரக்கூடிய பலனாகும்.

மாணவர்களுக்கு: இந்தச் சனிமாற்றம் 15.11.2007 வரை கல்வியில் நற்பலன் தர இடமில்லை. அப்பால் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 15.12.2008 வரை மிக நல்ல பலனும் கல்விப் பெறுபேறு நன்மையும் தரும். சிலருக்குக் கடல் கடந்த நாட்டுக் கல்வியும் அதனால் நற்பலனும் உண்டு. ஆய்வு செய்யக்கூடிய இரசாயனம் சம்பந்தப்பட்ட விஞ்ஞான கல்வியை கற்பதற்கு இந்த ராசிக்காரர்களுக்கு [illegible]னமை தரக்கூடிய பலன் அமையும்.

தொழிலாளர், உத்தியோகர்களுக்கு: செவ்வாய்க் கிரகமே உங்களுக்கு தொழில் கிரகமாக இருப்பதால் 16.09.2007 வரை தொழில்நிலை கெடும் சாத்தியமுண்டு. அப்பால் நன்மை தரும். சிலருக்கு கடல் கடந்த நாடு சென்று தொழில் செய்யும் பலன் வரும். 5ஆம் இடத்திற்கு குரு 15.12.2007 இல் பணம், பொருள் வரவு நன்மை தரும். ஆனாலும் 16.09.2007 வரை எதிர்நீச்சலான காலமாகும். தொழிலால் பண இழப்பு, நட்டம் என்பன தர இடமுண்டு.

மேலும் இந்த ராசிக்காரர்கள் அம்பிகை வணக்கத்தால் அல்லல்கள் தீர்க்க அம்மன் ஆலயங்களில் செவ்வாய், சனி, கேதுவுக்கு பிரீதி செய்து வழிபட துன்பம் நீங்கும். 2008ஆம் ஆண்டு உங்களுக்குநன்மை தரும் ஆண்டாகும். நினைத்தவை கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபா, ரணில் செயற்பாடுகள் ஒரு நிகழ்ச்சித் திட்டத்திலேயே!

குருநாகல் கூட்டத்தில் ஜனாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 6

''எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஒரே நிகழ்ச்சித்திட்டத்திலேயே - ஒரே சிந்தனையிலேயே - செயற்படுகின்றார்கள் என்பது இன்று மக்களுக்கு நன்றாகத் தெரிகின்றது.''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றுமுன்தினம் குருநாகலில் இடம் பெற்ற - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் - 'மக்கள் மேடை' பேரணிக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடு பிளவு படுவதை நாம் உறுதியோடு தடுத்து நிறுத்தியிருக்கின்றோம். அதேசமயம் நாட்டை அபிவிருத்தி செய்து, கட்டியெழுப்பவும் காத்திரமான நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அது மக்களுக்கு நன்கு தெரியும். மக்கள் எம்மோடு இருக்கும்வரை எந்தச் சக்தியாலும் நமது அரசைக் கவிழ்க்கவே முடியாது.

சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளனதான். ஆனால் நிலைமையைச் சரிசெய்ய எமது அரசுக்கு மக்கள் ஒரு கால அவகாசம் வழங்கவேண்டும்.

ஒருபுறம் பெரும் யுத்தம் ஒன்றை வெற்றிகரமாக நடத்திக்கொண்டு மறுபுறம் நாட்டை அபிவிருத்தியும் செய்கிறோம். சம்பள உயர்வுகளை வழங்குகிறோம். வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிறோம். இந்த மக்கள் நலத் திட்டங்களை நிறுத்த முடியாது.

அன்றாடம் உணவு அருந்துவது குறித்து மட்டும் நாம் சிந்திக்க முடியாது. நாட்டின் எதிர்காலம் குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இந்த நிலையில் எனது உருவப்படத்துக்குக் கல்லெறிவது, கொடும்பாவியைத் தீயிட்டுக் கொளுத்துவது போன்ற காட்சிகளை ரணில் மூலமாகவும், பிரபாகரன் மூலமாகவும் காணக்கிடைக்கிறது. இருவருமே ஒரே வேலைத்திட்டத்தின்கீழ் - ஒரே எண்ணத்தில் - செயற்படுகின்றார்கள் என்பது நாட்டு மக்களுக்கு இன்று நன்கு தெரியும். - என்றார் ஜனாதிபதி.

குருநாகல் கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. (சி)

படைச் சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஓக. 6

மூன்று மாதகாலமாக கடமைக்குத் திரும்பாத படைச்சிப்பாய் ஒருவர் வெலிமடை பம்பல பகுதியில் நேற்றுக் காலை மரம் ஒன்றில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிப்பாய் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்துகொண்டாரா என்பது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறார்களைப் பலவந்தமாகத் தனது படைக் குச் சேர்த்து வரு வதையும் இந்த அறிக்கை விரிவாக ஆராய்கிறது என்றும் தெரிகின்றது.

அரச படைகளின் மோசமான மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களினால் பதிக்கப்பட்டோரின் கண்கண்ட சாட்சியங்களும் இந்த அறிக்கையில் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை மோசமாக விமர்சிக்கும் வழமையான - சர்வதேச - மனித உரிமைகள் அமைப்பின் போக்குக்கு மாறானதாக இந்த அறிக்கை அமைந்திருப்ப தாகவும் -

மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் இலங்கை அரசுக்கு எதிராகக் காத்திரமான செயல் நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச சமூகத்தை இந்த அறிக்கை வலியுறுத்திக் கோருகிறது எனவும் -

நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

தமிழக மக்கள் அன்பளிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலை ஆதரவாளர் குழு சார்பாக இந்த கண்டன மாநாடு நேற்று மாலை விழுப்புரம் சோலை மகால் மண்டபத்தில் நடைபெற்றது.

பட்டினி கிடக்கும் யாழ்.மக்களுக்கு அனுப்புவதற்காக தமிழக மக்களால் மனமுவந்தும், அளவில்லா ஆர்வத்துடனும் அளிக்கப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள் மற்றும் மருந்து வகைகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பி வைப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகளுக்கு அந்தச் சங்கம் இணக்கம் தெரிவித்தது.

ஆனால் அதற்குரிய அனுமதியை மத்திய அரசு கடந்த ஆறு மாத காலமாக வழங்காமல் இருக்கிறது. இந்திய அரசு அனுமதி வழங்க முன்வராததை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

பட்டினி கிடக்கும் யாழ்.மக்களுக்கு தானாகவே முன்வந்து உதவ வேண்டிய தமிழக அரசும், இந்தப் பிரச்சினையில் வாளாதிருப்பதோடு தமிழக மக்கள் வழங்கிய உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்புவதற்கு முன்வராததற்கு மாநாடு கண்டனம் தெரிவிக்கிறது.

தமிழக மக்களிடம் இந்தப் பிரச்சினை குறித்து எடுத்துக் கூற செப்ரெம்பர் 7 ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை பிரச்சாரப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இரு அணிகளாக திருச்சியில் இருந்து நாகபட்டினம் நோக்கியும் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் நோக்கியும் மக்கள் திரண்டு சென்று செம்ரெம்பர் 12ஆம் திகதி பொருள்களை படகுகளில் ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வர் - என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பசியால் வாடும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவவே இந்தப் பயணத்தை மேற்கொள்ள உள்ளோம். எனவே எங்களைக் கைது செய்தாலும், சுட்டுக் கொன்றாலும் நாங்கள் கவலைப்படப் போவதில்லை என்று பழ.நெடுமாறன் மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந்த மாநாடு மற்றும் பொதுக் கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராஜேந்திரன் தமிழ்த் தேசிய பொது உடமைக் கட்சியின் மணியரசு, தமிழ்த் தேசியக் கட்சியின் இள முருகன், புதுக்கோட்டை பாவாணன், பேராசிரியர் கல்யாணி ஆகியோர் பங்கேற்றனர். (அ-5)

நாயாற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த செம்மலையைச் சேர்ந்த தந்தையும், மகனும் இச் சம்பவத்திலிருந்து உயிர் தப்பினர். ஏனைய கடற்றொழிலாளர்கள் தமது வலைகளை வெட்டிவிட்டு கரைதிரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (5)

விலைவாசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலைவாசி அதிகரித்துக் காணப்படுவதாலும் வருமானம் இழந்த நிலையிலும் பொதுமக்கள் தமக்குத் தேவையான பொருள்களை வாங்க முடியாத நிலை இருப்பதாலும் மக்களின் வசதி கருதி குறிப்பிட்ட பொருள்களை நியாய விலையில் பெறக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பொதுமக்களின் கஷ்டங்கள் குறித்தும் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டிருக்கிறேன்.

அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாட்டினாலும் விலையேற்றத்தினாலும் மக்கள் கஷ்டமுறுகிறார்கள். இது பட்டினி நிலைக்கும் வழி வகுக்கும். அதிலிருந்து மக்களைப் பாதுகாக்கக் கூடியதாக இந்த மாதம் முடிவடைவதற்குள் நிலைமையைக்கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். வர்த்தகர்கள் நியாயமான இலாம் பெறலாம். அவர்கள் கொள்ளை லாபம் பெற முயற்சிக்கக்கூடாது.

அதிகாரிகளுக்கும் பிரச்சினைகள் உண்டு

ஒரு மெற்றிக் தொன்னுக்கு அறவிடப்படும் 75 டொலர்கள் கப்பல் கட்டணம் அதிகமானதாகும். அமெரிக்காவில் இருந்து எடுத்துவரக்கூட அந்தளவு தேவைப்படாது. முன்னரெல்லாம் கப்பல் கட்டணம் 50 டொலர்களாக இருந்தது. அப்போது புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொண்டு அதனை 30 டொலர்களாக குறைக்க நடவடிக்கை எடுத்திருந்தேன். இப்போது இந்த விடயத்தை கையாள்வதில் அரச அதிகாரிகளுக்கும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. (அ-111)

பொலிகண்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோரையும் துருவித் துருவி விசாரணை செய்த படையினர், இரண்டு இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் படம் எடுத்தனர். சம்பந்தப்பட்ட இருவரையும் இராணுவ முகாமுக்கு வருமாறு கூறிச் சென்றனர் - எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-155)

ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சார்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவார் என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச ரீதியில் மோசமான விமர்சனங்கள் எழுந்துள்ள பின்னணியில் அவற்றை எதிர்கொண்டு முறியடிக்கும் வகையில் இந்தக் கூட்டத்துக்குத் தாமே நேரடியாகச்சென்று உரையாற்ற ஜனாதிபதி மஹிந்த தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

ICT - ICT - ICT
Grade 10
English Medium
Tamil Medium
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு
R.Kumaran - B.Sc.
0776577359

விடுமுறை விரிவு
2008 (A/L) தமிழ்
செவ் 9-10மணி
வியா 9-10மணி
சனி 3-4மணி
ஞாயிறு 3-4மணி
* நாகம்மாள்
* இலக்கிய வரலாறு
* இலக்கணம் (Ś.ரினா)
B.A (Hons)
SHAMROCK
சமரோன

MY COMPUTER தமிழ் கணனி மாத இதழ் சகல இடங்களிலும். வெளியீடு: SPEED IT net, 4591871

NEW SCIENCE CENTER
யாழ் - நகர்
பௌதீக வியல் விடுமுறை வகுப்பு புலங்கள் (திங், புதன், வெள்ளி) (8.00- 9.00)am ஆரம்பம் : 08:08: 2007 (புதன்)
By:K.SelVan.
Propriter : N.Poobalasingam

A/L 2008, 2009
H.L - N.T.தரன் Acc - A.வின்சன்
Tai - M.சுரேஸ் Eco - E.ஞானேஸ்
Dra - K.மங்களேஸ் B.st - K.சாந்திநாதன்
Chr - A.பஸ்ரியன் Po.Sc - T.திருமுருகன்
Log - P.கமல் Geo - K. கிருஸ்ணா
ஆரம்பம் 07.08.2007 காலை 7 மணி
GAQ, BA யாழ்.பேராதனை
விரிவுரைகள் ஆரம்பம் 8 a.m.
ஐடியல் ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

B.A. Part I, II யாழ்.
துரித மீட்டல் வகுப்புக்கள்
G.A.Q, B.A. (யாழ்.பேராதனை)
1st in com, B.Com, AAT
இந்து தர்மாசிரியர் தேர்வு 2007
விரிவுரைகள் ஆரம்பம் 07.08.2007 பி.ப. 3
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி இணுவில்

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

மலர்வு 22.05.1920 உதிர்வு 07.07.2007

திருமதி
செல்லம்மா பரமகுரு

மாதம் ஒன்று சென்றாலும்
உங்கள் அன்புமுகம் மறையவில்லை.
அம்மா! அன்போடு எம்மைத் தூக்கி
நெஞ்சினில் சுமந்த அம்மாவே!
ஆறாத் துயரில் எம்மை விட்டு
ஆண்டவன் அடியில் சேர்ந்தீர்களோ அம்மா!

அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது வருகை தந்தோருக்கும் எமது துயரில் பங்குகொண்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 06.08.2007ஆம் திகதி திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு, மீசாலை. (63375) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.